அமரர் திருவாட்டி

**காந்திமதி செல்வத்தம்பி அவர்களின்**

முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டிய

# நினைவு மலர்



*மண்ணில் 16.04.1916* *விண்ணில் 22.12.2010*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மண்ணில்

16 . 04 . 1916



விண்ணில்

22 . 12 . 2010

அமரர் திருவாட்டி

# காந்திமதி செல்வத்தம்பி அவர்களின்

முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டிய

# நினைவு மலர்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விகிர்தி தனிலானமார் கழியிலே
பூண்டுவரு பூர்வ பக்கப் பிரதமையில் - நீண்டபுகழ்
காத்த ஏந்திழையாள் காந்திமதி அம்மனடி
போந்த திதியென்று செப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் - மாமலராள்
நோக் குண்டாம் மேனிநுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திரு மேனித்தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங் கயலார்புனற் செல்வ மல்கு சீர்கொள்
செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங் கெரியேந்தியாடும்
கணபதீச்சரங் காமுறவே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது
உன் அடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள் வாயே
உத்தமா தான சற்குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்திநி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் காந்திமதி செல்வத்தம்பி

**16.04.1916 - 22.12.2010**

புலோலி மேற்கைச் சேர்ந்த மாணிக்கம் செல்வத்தம்பி அவர்கள் புலோலி கிழக்கைச் சேர்ந்த காந்திமதி வினாசித்தம்பி அவர்களைக் கல்யாணம் செய்த போது செல்வத்தம்பியாருக்கு வயது நாற்பத்தேழு காந்திமதிக்கு இருபது. புலோலி மேற்கு, புலோலி கிழக்குச் சம்பந்தம், அதற்கு முன்னரே ஏற்பட்டு விட்டது. செல்வத்தம்பியாரின் சகோதரியான வள்ளிப்பிள்ளை, கணையந்தோட்டத்தில் அண்ணாவி தாமரின் மகனான சதாசிவத்தை மணந்தார். செல்வத்தம்பியாரின் தம்பியான மயில்வாகனம், புலோலி தெற்கில் புற்றளையில் பன்னங்கொத்தைக்குள் சம்பந்தம் செய்தார். வரலாற்றுப்படி பார்த்தால், செல்வத்தம்பியாருக்கு உரிய இடம் புலோலி தெற்கும், அதன் பின்னர் புலோலி கிழக்கும்தாம். புலோலி மேற்கும், 'மாணிக்க வாசா' வும் பின்னர் வந்து சேர்ந்த தொடர்புகள்தாம். செல்வத்தம்பியார் எழுதிவைத்த தோம்பைப் படித்துப் பார்க்கும் போது, காந்திமதியின் மூதாதையரும் செல்வத்தம்பியாரின் மூதாதையரும் ஏற்கெனவே பல தலைமுறைகளுக்கு முன்னர், சம்பந்திகள் ஆகி விட்டார்கள். அந்த வரலாற்றைப் பின்னர் பார்ப்போம்.

காந்திமதி வினாசித்தம்பி அவர்கள் செல்வத்தம்பியாரின் மூன்றாம் தார மனைவி. முதல் தார மனைவி ஐந்து செல்வங்களைப் பெற்றுத் தந்து விட்டு, நோய்வாய்ப்பட்டு இறந்தார். இரண்டாந்தார மனைவி, இராமச்சந்திரன் என்ற ஒரு செல்வத்தைத் தந்து விட்டு நோய்க்கு இரையாகி இறந்தார். மூத்த இரு பெண்களும், நான்கு ஆண்களும் தாயற்ற குழந்தைகள் ஆகினர். செல்வத்தம்பியாரின் அன்பான, அழகான சகோதரிமார் பொன்னம்மா, தையல்முத்து, வள்ளிப்பிள்ளை, சீதாதேவி, தெய்வானை ஆகிய ஐவரும் செல்வத்தம்பியாரின் மூத்த தாரப் பிள்ளை களுக்குத் தாயரும் தந்தையரும் ஆயினர். அழகான தோற்றம், ஆறடி உயரம், நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, சிவந்த மேனி, பெயர் பெற்ற வழக்கறிஞன் செல்வத்தம்பியாரைக் கணவனாக்கப் பலர் முயன்றனர்; சதியும் செய்தனர்; நிலை குலையவும் வைத்தனர். மலைநாட்டில் சட்டத்தொழில் செய்த செல்வத்தம்பியாருக்கு ஊரில் திருமணம் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தலே நன்று என்று செல்வத்தம்பியாரின் தகப்பனார் மாணிக்கர் விரும்பினார். உற்றார் பலரும் ஒப்பினர்; சிலர் எதிர்த்தனர். ஆறு பிள்ளைகள் இருக்கத் திருமணமா என்றனர் சிலர். திருமணம் மூலம் தான் செல்வத்தம்பியாரின் வாழ்வு ஒழுக்கமான வாழ்வாக அமையும் என்றனர் வேறும் சிலர். செல்வத்தம்பியார் குழம்பினார். நாற்பத்தேழு வயதிலேயே விதுரன் ஆகி, வாழ்காலம் எல்லாம் தனியனாக ஒழுக்க மற்று வாழ்வதா? அல்லது மூன்றாம் முறையாக மணம் முடித்துப் பிள்ளைகளோடு புலோலி மகனாக வாழ்வதா? செல்வத்தம்பி மறுகினார்.

அக்காலத்தில் கொழும்புத்துறையில் வாழ்ந்த யோகர்சுவாமி அவர்கள் செல்வத்தம்பியாரின் நம்பிக்கைக்குரிய பெரியவராக வாழ்ந்தார். அவரின் தீர்ப்பே நிறைவான தீர்ப்பாக/முடிவாக இருக்கும் என்று செல்வத்தம்பியார் தீர்மானித்து, யோகரிடம் போனார். யோகர் சுவாமியின் வீட்டுக்குள் செல்வத்தம்பியார் நுழைவதை யோகர் சுவாமிகள் தொலைவிலேயே கண்டு விட்டார். "யோசிக்க ஒன்றுமில்லை மூன்றாம் சோவும் ஓடித்தான் படம் நிற்கும் போடா, போய் வேலையைப் பார்" என்றார் யோகர். செல்வத்தம்பியார் தெளிவு பெற்றார்.

இந்தப் பின்னணியில் தான் செல்வத்தம்பியார் காந்திமதியைத் திருமணம் செய்தார். செல்வத்தம்பியாருக்குத் தாலிப் பொருத்தம் இல்லையென்று சாத்திரிமார் சொன்னார்கள். முதல் இரு மனைவிமாரும் தவறியதும் அதனாலேதான் என்றார்கள். ஆகவே அவர் காந்திமதிக்குத் தாலி கட்டவில்லை. பதிவுத் திருமணமும் பந்தல் திருமணமும் நடை பெற்றன. அப்போது இராமச்சந்திரனுக்கு வயது ஐந்தோ ஆறோ இருக்கலாம். ஏனைய பிள்ளைகளும் சிறுமியரும் சிறுவர்களும் தாம். மாமிமாரும் மாமன்மாரும் அவர்களைக் கண்களாகப் போற்றி வளர்த் தனர். செல்வத்தம்பியார் தமது பொறுப்பிலிருந்து தவறவில்லை. பிள்ளைகளுக்கு வேண்டிய பண உதவியினைக் குறைவறச் செய்தே வந்தார். இருந்தும், ஊர்வாய்கள் இடைக்கிடை குறை கூறிக் கொண்டே இருந்தன. சில உறவினரின் கோபக் கனல் காந்திமதி மீதும் தெறித்தது. காந்திமதி பொறுப்பாக நடந்து கொண்டார்; பொறுமையாகவும் நடந்து கொண்டார். அதன் மூலம் தம்பசெட்டியாரின் அன்பையும் மதிப்பையும் பெற்றுக் கொண்டார். காந்திமதி இறக்கும்வரை அந்த அன்பான உறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்தது. தருமம் தலை காக்கும் என்பதில் செல்வத்தம்பியாருக்கு அசையாத நம்பிக்கை இருந்தது. 'பிறர் பிள்ளை தலை தடவத் தன்பிள்ளை தானே வளரும்' என்பது செல்வத்தம்பியாரின் 'மகா வாக்கிய' மாக இருந்தது. அவர் நம்பியபடியே அவருடைய பிள்ளைகள் அனைவரும் யோக்கியர்களாகவும் நல்ல பதவி ஆள்வோராகவும் இருந்தனர், இருக் கின்றனர்.

1936 இல் செல்வத்தம்பியாரைத் திருமணம் செய்த காந்திமதி, 1977 ஆம் ஆண்டில் செல்வத்தம்பியாரை இழந்தார். கணவனை இழந்த பின்னர், தனியொரு மகளான பத்மாவதி கதிர்காமத்தம்பியின் பாதுகாப்பில் முப்பத்துமூன்று ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்த காந்திமதி அவர்கள் 22.12.2010 அன்று அவரது 94 ஆவது வயதில் காலமானார். வினாசித்தம்பி யின் பிள்ளைகள் என்று சொல்ல இப்போது கணையந்தோட்டத்தில் எவரும் இல்லை. வினாசித்தம்பியின் பிள்ளைகள் என்ற தோப்பிலே கடைசி மரமாக நின்ற காந்திமதி நிம்மதியாகவும் உபாதை இல்லாமலும் போய் விட்டார்.

அவரின் பெயர் சொல்ல அவருக்கு ஒன்பது பிள்ளைகள், இருபத் திரண்டு பேரப்பிள்ளைகள், இருபத்திரண்டு பூட்டப்பிள்ளைகள் வாய்த்துள்ளனர்.

காந்திமதியின் தகப்பனார் ஓர் அண்ணாவியார். பள்ளிக்கல்வி என்று ஒன்று நிறைவாக இல்லா விட்டாலும் அனுபவக் கல்வி பெற்றவர். இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் ஊறியவர்; சோதிடமும் சற்றுத் தெரிந்தவர்; நிகண்டும் படித்தவர்; தாளலயம் தெரிந்தவர்; இராகங்கள் புரிந்தவர்; நாட்டுக் கூத்துகளில் நடித்த நடிகர்; நாட்டுக்கூத்து, காவடி ஆட்டம் கரக ஆட்டம் முதலியன வற்றைப் பழக்கிய பழுத்த அண்ணாவியார்; எல்லாத் தொழிலும் தெரிந்த தொழிலாளி.

வினாசித்தம்பியாருக்கு ஆறு பிள்ளைகள். (1) இலச்சுமிப்பிள்ளை, (2) தங்கம்மா, (3) காந்திமதி, (4) முத்தம்மா, (5) பூரணம், (6) வேலும் மயிலும். வேலும் மயிலுவுக்கு வேலாயுதம் என்று ஒரு தம்பி இருந்த தாகவும் சிறுவயதில் இறந்து விட்டதாகவும் கேள்விப்பட்டிருக் கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் அதிகம் கற்க வேண்டியதில்லை, பெண்கள் கற்கக் கூடாது என்று ஒருகாலம் இருந்தது. அந்தக் காலத்தில் பிறந்தவர் காந்திமதி. அதனால் காந்திமதி தமிழ்ப் பள்ளிக் கூடத்தில் ஐந்தாம் வகுப்பு முடித்த பின்னர் தமது கல்வியை நிறுத்த வேண்டியாயிற்று. புள்ளிக்கு உதவாத கல்விப்படிப்பு அதிகம் இல்லை என்றாலும், காந்திமதி இயற்கையான ஒரு விவேகி; இயல்பான மதிநுட்பம் வாய்ந்தவர். வடிவான அழகு பெற்றிருந்த அவருக்குக் கவர்ச்சியான ஒரு சிரிப்பையும், புன்னகை பூக்கின்ற கண்ணையும் இறைவன் கொடுத்திருந்தான். அந்தக் கண்ணில் என்றுமே கண்ணோட்டம் என்ற காரிகை குடியிருந்தாள்.

மாத்தளையில் தமது சட்டத் தொழிலை ஆரம்பித்த செல்வத்தம்பியார் பிற்காலத்தில் இலங்கையின் சனாதிபதியாக இருந்த William Gopallawa அவர்களின் சட்டத் துறைக் குருவாக இருந்தவர். மாத்தளை, அற்றன், வவுனியா, அனுராதபுரம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் சட்டத் தொழில் புரிந்த செல்வத்தம்பியார், அவரின் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தவில்லை என்று குறை கூறுபவர்கள் உண்டு. அப்படி இருந்தும் அவருடைய எல்லாப் பிள்ளைகளும் வாழ்க்கையில் நல்லவர் காளகவும், வல்லவர்களாகவும், உயர்ந்தார்கள்.

காந்திமதியின் மூத்த மகனின் மூத்த மகனான கணேசராசா சாவகச் சேரியில் மாவட்ட நீதிபதியாகக் கடமை ஆற்றுகின்றார். வழக்கறிஞரான சிறீக்கந்தராசாவின் மூத்த மகன் அருணன் இலண்டனில் சட்ட அறிஞராகப் பணிபுரிகிறார். சிறீயின் மகளான சாம்பவி இலண்டனில் மருத்துவராகப் பணிபுரிகிறார். நவரத்தினராசாவின் மகனான நவநீதன் கனடாவில் கணக்காளராகப் பணிபுரிகின்றார். தருமராசாவின் மகனான சிறீனிவாசன் கணனித்துறை ஆலோசகராக நெதர்லாந்தில் Price Water Cooper என்ற தாபனத்தில் கடமையாற்றுகின்றார். ஒஸ்திரோலியாவில் வாழுகின்ற குலராசாவின் மூத்த மகன் பிரசாந் அவர்கள் ஒஸ்திரேலியாவில் Actuary எனப்படுகின்ற நிதித்துறை நிபுணராக Citibank இல் தொழில் பார்க்கின்றார். குலராசாவின் இரண்டாம் மகனான கிரிசாந் ஒஸ்திரேலியாவில் சட்டத்துறை ஆலோசகராகக் கடமை ஆற்றுகின்றார். துரைராசாவின் தனியொரு பிள்ளையான கிருத்திகா கொழும்பில் பிரபல NGO ஒன்றில் Project Manager ஆக பணியாற்றி வருகின்றார். இவ்வாறு காந்திமதியின் பேரப்பிள்ளைகள் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்திமதி அதிகம் கற்காவிட்டாலும் அவரின் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டி அவர்களை நல்வழிப்படுத்தினார். செல்வத் தம்பியார் தருமம் தலைகாக்கும் என்று நம்பி வாழ்ந்ததால் காந்திமதியின் பிள்ளைகள் எல்லோரும் சூத்தை குத்தாமல் உயர்ந்து மிளிர்கிறார்கள். இந்த நிறைவோடு காந்திமதி மறுபிறப்பை நாடிப் போயிருக்கிறார். கடைசிவரை தன் வேலையைத் தானே பார்த்து வந்த காந்திமதி அவர்கள் இறுதி மூச்சுவரை சுயநினைவோடு இருந்து காலமானார். 94 ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்த காந்திமதி அவர்கள் பற்றிய நினைவு நின்று நிலைக்கும்.

*விளக்குப்புக இருள் மாய்ந்தாங்கு ஒருவன்*
*தவத்தின் முன் நில்லாதாம் பாவம் - விளக்குநெய்*
*தேய்விடத்துச் சென்று இருள் பாய்ந்தாங்கு நல்வினை*
*தீர்விடத்து நிற்குமாம் தீது*

*(நாலடியார் - 51)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கர் செல்வத்தம்பி
# ஆழ்வார் வினாசித்தம்பி
# ஆகியோரின் கொடியும் வேரும்

என் தந்தையார் செல்வத்தம்பி அவர்கள் தான் பிறந்த குடும்பத்தினதும் தான் புகுந்த குடும்பங்களினதும் வரலாற்றைப் பிற்சந்ததியினர் தெரிந்து கொள்ளும் வகையில் தோம்பு என்ற வமிச ஆவளி ஒன்றை எழுதி வைத்திருந்தார். அதை வாசித்துப் பார்த்து விட்டுத் திருப்பித் தருவதாகச் சொல்லி எடுத்துச் சென்ற வழக்கறிஞர் ஒருவர் பின்னர் அதனைத் திருப்பிக் கொடுக்கத் தவறிவிட்டார். என் தந்தையார் இறந்து பல ஆண்டுகளின் பின்னர் அந்தத் தோம்புப் புத்தகம் மாவட்ட நீதிபதியாக இருந்த என் மச்சாள் சுந்தரி அருச்சுனாவிடம் சிக்கியது. அவரிடமிருந்து பெற்ற தகவல்களையும் சுந்தரமாமா தயாரித்த கச்சாய் விநாயகர் பற்றிய செய்திகளையும் அடிப்படையாக வைத்துக் கீழே காணும் 'வேரும் கொடியும்' என்ற கட்டுரைகளைத் தொகுத்திருக்கிறேன். குறைகளும் இடைவெளிகளும் நிறையவே உள்ளன. அப்படியிருந்தும் அந்தத் தகவல் களை எழுத்துருவில் கொடுத்து விட வேண்டும் என்ற ஆசையால் என் அம்மா இறந்து ஓராண்டு நிறைவுறுகின்ற இந்த நாளில் அவருக்கான நினைவு மலரில் அவற்றை வெளியிடுகிறேன். இதைப் படிக்கின்றவர்கள் இடைவெளிகளை நிரப்பி முழுமையாக்கினால் மகிழ்வேன். சுந்தரி மச்சாளுக்கும் சுந்தர மாமாவுக்கும் எனது நன்றிகள்.

செ. சிறீக்கந்தராசா
இலண்டன்

*புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி*
*இன்னினியே செய்க அறவினை - இன்னினியே*
*நின்றான் இருந்தான் கிடந்தான் கேளலறச்*
*சென்றான் எனப்படுத லால்*

*(நாலடியார் - 29)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கர் செல்வத்தம்பி
## ஆழ்வார் வினாசித்தம்பி
## ஆகியோரின் கொடியும் வேரும்

## Manickam Chelvatamby of Manicka Vasa,
## Puloly West, Point Pedro

1. மாணிக்கர் செல்வத்தம்பி அவர்களின் கொடியின் வேரைப் பார்க்கின்றபோது, ஆதி ஆணிவேர் எங்கே இருக்கின்றது என்று தெரியவில்லை.

2. ஆனாலும் கிளை வேர்களில் ஒன்று மட்டும் தெரிகிறது.

3. அந்த வேர் 'அரசு நிலைகண்ட திருவம்பல முதலியார்' என்று பெயர் பெறுகிறது.

4. திருவம்பல முதலியாருக்கு இரண்டு பிள்ளைகள்.

5. ஒருவரின் பெயர் முருக உடையார்; மற்றவரின் பெயர் பெருமையினார்.

6. பெருமையினாருக்கு ஒரு மகன்: அவரின் பெயர் கதிர்காமர்.

7. கதிர்காமர், கோணாத்தை என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். கோணாத்தை என்பவர் கதிர்காம முதலி என்ற ஒருவரின் அடியில் வந்த சுப்பிரமணியர் என்பவரின் மகள். கோணாத்தையின் கணவன் வெள்ளெனவாக இறந்து போனார். அவர் இறந்த பின்னர், கோணாத்தை இரண்டாம் தாரமாக முருக உடையாரின் வேரில் இருந்து வந்த ஆறுமுகம் என்பவரை மணம் செய்தார். இந்த இரண்டாம் தார மணத்தின் மூலம் கோணாத்தைக்கு ஆறு பிள்ளைகள்.

8. இந்த ஆறு பிள்ளைகளில் இரண்டு பேர் ஆண்கள்.

9. ஒருவரின் பெயர் விதானை பெருமாள்;
மற்றவரின் பெயர் கோணார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மேற்படி கதிர்காமர் கோணாரைப் பற்றி வேறு விபரம் எதுவும் தெரியவில்லை.

11. மேற்படி விதானை பெருமாள் பெத்தார் என்பவரின் ஒரு மகளை மணம் முடித்தார்.

12. விதானை பெருமாளுக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தனர்.
    - a. இராமச்சந்திரன் (ஆண்)
    - b. உமையாத்தை (பெண்)
    - c. தையல் முத்து (பெண்)
    - d. சின்னவள் (பெண்)
    - e. சீதேவன் (ஆண்)
    - f. சின்னம்மா (பெண்)

13. மேலே சொன்ன தையல்முத்து என்பவர் புற்றளை வேலப்பர் என்பவரைத் திருமணம் செய்தார்.

14. தையல்முத்து-வேலப்பர் தம்பதியினருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களில் இருவர் ஆண்கள், இருவர் பெண்கள்.

15. ஆண்களில் மூத்தவரின் பெயர் மாணிக்கர். இவர்தான் பிற்காலத்தில் வில்லூண்டி மாணிக்கர் என்று பெயர் பெற்றவர். மற்றவரின் பெயர் ஆறுமுகம் எனப்பட்ட நல்லையா. இவர் செம்படையர் என்று அறியப்பட்டார்.

16. வேலப்பர் மாணிக்கர் என்பவர் பாறுபதி (சின்னப்பிள்ளை என்ற இளையபிள்ளை) என்ற பெண்ணைத் திருமணம் செய்தார்.

17. மேற்படி மாணிக்கர் தம்பதியினருக்குப் பத்துப் பிள்ளைகள்:
    - a. செல்வத்தம்பி (Proctor)
    - b. நாகராசா என்ற வேலுப்பிள்ளை (Teacher)
    - c. பொன்னம்மா (Mrs. Proctor Pasupathy)
    - d. தையல் முத்து (Mrs. Kandiah)
    - e. மயில்வாகனம் (Father of Solicitor Markandan)
    - f. இளையதம்பி (Proctor)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

g. வள்ளிப்பிள்ளை (Mrs. Sathasivam)

h. சீதாதேவி (Mrs. Villavarajar)

i. தெய்வானை (Mrs. Sabapathipillai)

j. ஆறுமுகம் (Died young)

18. மேற்படி செல்வத்தம்பி என்ற வழக்கறிஞர் Dr. சபாபதி என்பவரின் சகோதரியைத் திருமணம் செய்தார். அதன் பயனாக அவருக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர்:

a. முத்துக்கிருஷ்ணண் (Dr. Sathanandan's father)

b. பெருமாள் பிள்ளை (Dr. Ravi Pillai's father)

c. அருச்சுணன் (Husband of Sivakamasundari/ District Judge)

d. இராசம்மா (குமாரசாமி என்ற மண்டலாயின் மனைவி)

e. தங்கம்மா (Mrs. Sivarajah)

19. முதல் தார மனைவி இளமையிலேயே இறந்து போனதும், செல்வத் தம்பியார் அவரின் அயலவரும் உறவினருமான செல்லம்மா என்பவரைப் பலரின் எதிர்ப்பின் மத்தியில் திருமணம் செய்தார். இந்த இரண்டாம் தாரத் திருமணத்தின் பயனாக இராமச்சந்திரன் என்று ஒரு மகன் பிறந்தார்.

20. இராமச்சந்திரனின் தாயாரும் வெகுவிரைவில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

21. செல்லம்மா இறந்ததும், செல்வத்தம்பியார் மூன்றாம் தாரமாகப் புலோலி கிழக்கில் கணையந்தோட்டத்தில் வினாசித்தம்பி என்பவரின் மூன்றாம் மகளான காந்திமதியை மணம் புரிந்தார்.

22. மேற்படி செல்வத்தம்பி காந்திமதி தம்பதியினருக்கு ஒன்பது பிள்ளைகள் பிறந்தனர்:

a. மாணிக்கவாசகர் (Journalist)

b. சிறீக்கந்தராசா (Solicitor)

c. பத்மாவதி கதிர்காமத்தம்பி

d. நவரத்தினராசா (Gov. Servant)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

e. *தருமராசா* (Gov. Servant)

f. *ஆனந்த நடராசா* (Labour Officer)

g. *குலராசா* (Cashier)

h. *துரைராசா* (General Manager - IT)

i. *கணேசராசா* (Attorney at Law)

23. செல்வத்தம்பியின் சகோதரனான நாகராசா என்ற வேலுப்பிள்ளை, புலோலி கிழக்கில், புற்றளை என்ற ஊரில் மாற்றுச் சம்பந்தம் செய்தார்.

24. செல்வத்தம்பியின் சகோதரியான பொன்னம்மா, பசுபதி என்ற வழக்கறிஞரைத் திருமணம் செய்தார். வழக்கறிஞர் பசுபதி என்பவர் மாணிக்கரின் சகோதரியின் மகன்; செல்வத்தம்பியாரின் சொந்த மச்சான்.

25. செல்வத்தம்பியின் அடுத்த சகோதரியான தையல் முத்துவும் மாற்றுச் சம்பந்தம் செய்தார். அதாவது நாகராசா பெண்சாதியின் சகோதரனான கந்தையா என்பவரைத் திருமணம் செய்தார்.

26. செல்வத்தம்பியின் சகோதரனான மயில்வாகனம் என்பவர், புற்றளையில் பன்னங்கொத்தை என்ற இடத்தில் மணஞ் செய்தார்.

27. செல்வத்தம்பியின் இளைய சகோதரனான இளையதம்பி என்பவர், கிராமக் கோட்டில் பொன்னப்பா என்பவரின் மகளான மகேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்தார்.

28. செல்வத்தம்பியின் சகோதரியான வள்ளிப்பிள்ளை, புலோலி கிழக்கில் கணையந்தோட்டத்தில் அண்ணாவி தாமர் என்பவரின் மகனான சதாசிவம் என்பவரைத் திருமணம் செய்தார். இந்தச் சதாசிவம் கொழும்பில் வாழ்ந்த சாண்டோ பொன்னையா என்பவரின் சகோதரர்.

29. செல்வத்தம்பியின் இன்னொரு சகோதரியான தெய்வானை, புலோலி கிழக்கில், கிணற்றடி வளவில் வாழ்ந்த பொன்னர் என்பவரின் மகனான சபாபதிப்பிள்ளை என்பவரை மணந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. செல்வத்தம்பியாருக்கு ஆறுமுகம் என்ற பெயருள்ள தம்பி ஒருவர் இருந்ததாகவும், அவர் ஒரு பெரிய சண்டியன் என்றும், இளவயதில் இறந்து விட்டதாகவும் கேள்விப்படுகிறோம்.

31. இந்தக் கட்டுரையில் ஐந்தாம் பந்தியில் 'முருக உடையாரும்' 'பெருமையினாரும்' சகோதரர்கள் என்று குறிப்பிட்டிருந்தேன். இவர்களுக்கு வேறும் சகோதரர்கள் இருந்தார்கள்.

32. பெருமையினாரின் வம்ச ஆவளியை மேலே 30 ஆம் பந்திவரை விவரித்தேன்.

33. இனி, முருக உடையாரின் வம்ச ஆவளியைப் பார்ப்போம்.

34. முருக உடையாருக்கு ஆறு சகோதரங்கள்:

   a. கந்தர்

   b. ஆழ்வார்

   c. வினைதீர்த்தார்

   d. கோணர்

   e. தணச்சியார்

   f. சிதம்பரியார்

35. மேற்படி முருக உடையாரின் சகோதரனான ஆழ்வாருக்கு நான்கு பிள்ளைகள், பின்வருமாறு:

   a. வேலர் (Grandfather of Satavatani Kathira Vetpillai)

   b. சுப்பர்

   c. ஆறுமுகத்தார் (The Second husband of Konattai who was the mother of Vidanai Perumal, and father of Seviddu Alvar)

   d. சிதம்பரியார்.

36. இந்தக் கட்டுரையின் 7ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கோணாத்தை என்பவர், விதானை பெருமாளின் தாயார் என்பதை மறந்துவிடக் கூடாது. (கச்சாய் வினாயகர் பற்றிய கட்டுரையில் வருகின்ற கோணாத்தை வேறு ஒருவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. இந்தக் கோணாத்தை என்பவர், அவருடைய முதலாம் கணவரான கதிர்காமர் இறந்த பின்னர், மேலே முப்பத்தைந்தாம் பந்தியில் குறிப்பிட்ட ஆழ்வார் ஆறுமுகத்தைத் திருமணம் செய்தார்.

38. மேற்படி இரண்டாம் தாரத் திருமணத்தின் விளைவாக, ஆறுமுகம் - கோணாத்தை தம்பதியினருக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தனர்:

 a. செவிட்டு ஆழ்வார் (Husband of Kantattai from Kachchay Vinayagar family)

 b. கார்த்திகேசர்

 c. சீதேவி (Wife of Sinnaviyar who was a son of Kachchay Vinayagar)

 d. குழந்தை (Mother of சட்டம்பி தியாகர்)

 e. சின்னப் பிள்ளை

 f. பாறுவதி.

39. மேற்படி செவிட்டு ஆழ்வார், கச்சாய் வினாயகரின் மகளான கந்தாத்தையை மணம் முடித்தார்.

40. செவிட்டாழ்வார்-கந்தாத்தை தம்பதியினருக்குப் பிறந்த பிள்ளை யின் பெயர் வள்ளிப்பிள்ளை.

41. இந்த வள்ளிப்பிள்ளை என்பவர், கணபதிப்பிள்ளை (வேலுப் பிள்ளை) என்பவரை மணம் முடித்தார்.

42. வள்ளிப்பிள்ளை-கணபதிப்பிள்ளை தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தனர்:

 a. தங்கம்மா (Mrs. Velupillai Kathirkamu)

 b. பொன்னம்மா (Details not known)

 c. குலசேகரம் (Father of Paalaali & Kesavanampi)

 இந்தக் குலசேகரத்தின் மனைவியின் தாயாரும், ஆழ்வார் வினாசித்தம்பியின் மனைவியும் சகோதரங்கள்.

43. மேற்படி தங்கம்மா என்பவர் வேலுப்பிள்ளை கதிர்காமு என்பவரை மணம் முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. மேற்படி திருமணத்தால் தங்கம்மா-கதிர்காமு தம்பதியினருக்கு இரண்டு பிள்ளைகள்:

    a. நாகம்மர்

    b. வேலுப்பிள்ளை (எருமை வேலுப்பிள்ளை)

45. மேலே நாற்பத்தியிரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பொன்னம்மா பற்றிய விபரங்கள் தெரியவில்லை.

46. மேலே நாற்பத்தியிரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட குலசேகரம் என்பவர் இராசம்மா என்பவரைத் திருமணம் செய்தார்.

47. மேற்படி இராசம்மா என்பவர், குண்டிக் கணபதியாரின் மகள். இந்த இராசம்மா, காந்திமதி செல்வத்தம்பியின் தாயாரின் சகோதரியின் மூத்த மகள்.

48. குலசேகரம் இராசம்மா தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகள்:

    a. பாலாழி (Mrs. Puvanendram)

    b. கேசவனம்பி (Deceased)

    c. மணிவண்ணன் (Died Young)

49. மேற்குறித்த பாலாழி என்பவர், சேவையர் சின்னையாவின் மகனான புவனேந்திரனை மணம் முடித்தார்.

50. மணிவண்ணன் இளவயதில் இறந்து போனார்.

51. கேசவநம்பியும் காலமாகிவிட்டார்.

52. மேலே முப்பத்தெட்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சீதேவியின் மகன் தான் கூளாவடித்தாமர்.

53. மேற்படி சீதேவி என்பவர் கச்சாய் விநாயகரின் மகனான சின்னவியாரை மணந்தார்.

54. மேற்படியாரின் பிள்ளைதான் கூளாவடித்தாமர்.

55. மேற்படி முப்பத்தெட்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட குழந்தை என்ற பெண், யாரைத் திருமணம் செய்தார் என்பது தெரிய வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. ஆனால் மேற்படி குழந்தையின் மகன்தான் சட்டம்பி தியாகர், இந்தத் தியாகரின் மகன்தான் சொத்திப்பத்தண்ணன்.

57. இந்தக் கட்டுரையை இப்போதைக்கு இவ்வளவில் நிறுத்திவிட்டு கச்சாய் விநாயகரின் வேரையும் கொடியையும் பற்றிக் கீழ்வரும் கட்டுரையில் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சாய் விநாயகரின் வேரும் கொடியும்

## Kachchay Vinayagar of Kanayanthottam Puloly East, Point Pedro

1. கச்சாய் என்பது ஓர் ஊரின் பெயர். கச்சாய் விநாயகர் என்பவர், கச்சாயிலிருந்து பருத்தித்துறைக்குக் குடிபெயர்ந்து வந்தவராக இருக்கலாம்.

2. கச்சாய் வினாயகர் யாரை மணம் முடித்தார் என்பது தெரியவில்லை.

3. கச்சாய் வினாயகருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர் என்று தெரிகிறது:

   a. சின்னவி (Husband of Seethevi who was a daughter of Konattai by Arumugam)

   b. சடையர் என்ற கணபதிப்பிள்ளை அல்லது ஆழ்வார் (Father of Vinasithamby who was the father of Kanthimathy and others)

   c. கோணாத்தை (விதானை பெருமாளின் தாயார் இவர் அல்லர்)

   d. கந்தாத்தை (செவிட்டாழ்வாரின் மனைவி).

4. ஆறுமுகத்தார்-கோணாத்தை தம்பதியினர் என்று நாம் மாணிக்கர் செல்வத்தம்பி பற்றிய கட்டுரையில் குறிப்பிட்ட தம்பதியினரின் மகளான சீதேவி என்ற சிவகாமனை மேற்படி சின்னவியார் என்பவர் மணம் முடித்தார்.

5. மேற்படி சின்னவியார் சீதேவி தம்பதியினரின் மகன்தான் கூளாவடித் தாமர்.

6. மேலே மூன்றாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சடையர் அல்லது ஆழ்வார், முதல் தாரமாக வள்ளிப்பிள்ளை என்பவரை மணம் செய்தார். அதன் மூலம் வினாயகர் என்று அறியப்பட்ட மாட்டு வைத்தியரைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பின்னர், இந்தச் சடையர், இரண்டாம் தாரமாகச் சின்னப்பிள்ளை என்பவரை மணம் செய்தார். இந்தச் சின்னப் பிள்ளைக்கு வேறு செல்லப் பெயர்களும் இருந்திருக்கலாம் போலும்! இந்தச் சின்னப் பிள்ளைதான் வினாசித்தம்பியின் தாயார். சின்னப்பிள்ளை ஆறு சகோதரங்களோடு பிறந்தவர்-

a. கற்பாத்தை (கோவிந்திப் பேத்தி, கண்ணாத்தைப் பேத்தி ஆகியோரின் தாயார்)

b. வள்ளியார் (கதிராசி மாமி, இலட்சுமி மாமி, கார்த்திகேசுப் பெரியையா ஆகியோரின் தாயார்)

c. சின்னத்தம்பியார் (ஆழிவளவுச் சிவப்பாத்தைப்பேத்தியின் தகப்பன்)

d. சின்னப்பிள்ளை (கணபதியாரின் தாயும், சுப்பையா மாமா, பசுபதி மாமா ஆகியோரின் பாட்டியும் ஆனவர்)

e. நாச்சிப்பிள்ளை என்ற சின்னப்பிள்ளை (சடையரின் மனைவியும் வினாசித்தம்பியரின் தாயாரும்)

f. ஒரு பெண் (இளவயதில் இறந்து போனார்)

g. கந்தப்பர் (வேலுப்பிள்ளைப் பரியாரியார், நாகப்பாப்பரி யாரியார், கோவிந்தன் பெண்சாதியின் தாயார் ஆகியோரின் தகப்பன்).

சடையர் என்றும், ஆழ்வார் என்றும், கணபதிப்பிள்ளை என்றும் அழைக்கப்பட்டவர், முதல் தாரமாகக் கட்டிய வள்ளிப் பிள்ளையின் வேரைப் பிடிக்க முடியவில்லை. சடையரின் மூத்த தார மகனான மாட்டு வைத்தியர் விநாயகர் பற்றிய விபரத்தையும் அறிய முடிய வில்லை.

8. சடையர்-சின்னப்பிள்ளை (நாச்சிப்பிள்ளை) தம்பதியினர் ஆறு பிள்ளைகளைப் பெற்றனர்:

a. வினாசித்தம்பி

b. நல்லதம்பி

c. கதிர்காமர்

d. வல்லியப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

e. சின்னவியார்

f. ஒரு பெண்

9. மேற்படி சடையர்-சின்னப்பிள்ளை தம்பதியினரின் தனியொரு மகள் அதாவது வினாசித்தம்பியாரின் அக்கையார் யாரைத் திருமணம் செய்தார் என்பது தெரியவில்லை.

10. குண்டிக்கணபதியார் என்று மாணிக்கர் செல்வத்தம்பியார் பற்றிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டவரின் மனைவியும், ஆழ்வார் வினாசித்தம்பியின் மனைவியும் கூடப்பிறந்த சகோதரிகள் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

11. இந்தக் கட்டுரையின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கச்சாய் வினாயகரின் மகளான கோணாத்தை, (அதாவது ஆழ்வாரின் சகோதரி) வைரமுத்தர் என்பவரை மணம் செய்தார்.

12. கோணாத்தை-வைரமுத்தர் தம்பதியினருக்குப் பிறந்தவர்கள் தான் வேலாயுதம் பள்ளிக் கூடத்தை ஆரம்பித்த வேலாயுதம் பிள்ளை முதலியவர்கள்.

13. மேலே மூன்றாம் பந்தியிலே குறிப்பிடப்பட்ட கந்தாத்தை என்பவர், செகிட்டாழ்வார் என்பவரை மணம் செய்தார். (இந்தச் சம்பந்தத்தின் மூலம்தான், கச்சாய்க்குரிய கச்சாய் விநாயகரின் வழித்தோன்றல் கள், திருவம்பல முதலியாரின் வழித்தோன்றல்களோடு தொடுக் கப்படுகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை உற்று நோக்க வேண்டியிருக்கிறது. அதாவது விதானை பெருமாளின் தாயாரான கோணாத்தை என்பவர், அரசு நிலை கண்ட திருவம்பல முதலியாரின் கொடியையும், முருக உடையாரின் கொடியையும், அத்துடன் கதிர்காம முதலி, புதியாத்தை ஆகிய வேர்களிலிருந்து வந்த கொடிகளையும் இணைக்கின்ற ஒரு பாலமாக விளங்கு கின்றார்.

எப்படி என்றால், விதானை பெருமாளின் தாயான கோணாத்தை என்பவர், வாரித்தம்பி என்ற மூல வேரிலிருந்து புறப்பட்ட புதியாத்தை என்ற ஒரு வேரிலிருந்து கிளம்பிய ஒரு கொடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரித்தம்பியை அடியாகக் கொண்ட இந்தக் கோணாத்தைக் கொடி, திருவம்பல முதலியாரின் அடியிலிருந்து பிறந்த பெருமையினார் கதிர்காமர் என்ற கொடியை முதல் தாரமாக மணம் முடிக்கின்றது.

பின்னர், இந்தக் கோணாத்தைக் கொடி, இரண்டாம் தாரமாக, திருவம்பல முதலியாரின் அடியிலிருந்து வந்த முருக உடையாரின் வழியில் வந்த ஆழ்வார் ஆறுமுகத்தாரை மணம் முடிக்கின்றது.

அப்படிப் பார்க்கின்றபோது, புதியாத்தை என்ற அடியிலிருந்து வந்த கோணாத்தை, பெருமையினார் வழியில் வந்த கதிர்காமரைக் கட்டியதன் பயனாக, விதானை பெருமாள், கோணர் என்ற இரண்டு பிள்ளைகளையும், அத்துடன் முருக உடையார் வழியில் வந்த ஆழ்வார் ஆறுமுகத்தாரைக் கட்டியதன் பயனாகச் செகிழ்டாழ்வார் முதலிய ஆறு பிள்ளைகளையும் பெற்றார் என்று எண்ணத் தோன்றுகின்றது. அதாவது கோணாத்தை எட்டுப் பிள்ளைகளைப் பெற்றார்.

14. கந்தாத்தை என்பவர், கச்சாய் விநாயகரின் வேரிலிருந்து வந்தவர் அதாவது கச்சாய் விநாயகரின் மகள். செகிழ்டாழ்வார் என்பவர், விதானை பெருமாளின் தாயாகிய கோணாத்தையின் இரண்டாந்தரத் திருமணத்தால் அவருக்கும் ஆறுமுகத்தாருக்கும் பிறந்த ஆறு பிள்ளைகளில் மூத்தவர்.

கந்தாத்தை என்பவர் செகிட்டாழ்வாரைத் திருமணம் செய்ததன் மூலம், விதானை பெருமாள் குடும்பத்தையும் கச்சாய் விநாயகரின் வழித்தோன்றல்களையும் இணைத்தார்.

15. கச்சாய் விநாயகரின் அடியிலிருந்து வந்த கந்தாத்தைதான், முதன் முதலாக, முருக உடையாரின் வழிவந்த செகிட்டு ஆழ்வாரோடு தொடர்பை ஏற்படுத்துகிறார்.

16. இதன் பின்னர் இந்த உறவு மேலும் வலுப்பெறுகின்றது.

17. கந்தாத்தையின் மூத்த அண்ணனான சின்னவியார் என்பவர், செகிட்டாழ்வாரின் சகோதரியான சீதேவியை மணம் முடிக்கிறார். (மாற்றுச் சம்பந்தம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மேற்படி சின்னவியார்-சீதேவி தம்பதியின் மகன்தான் கூளா வடித்தாமர்.

19. கச்சாய் விநாயகரின் மூன்றாவது பிள்ளையான கோணாத்தை என்பவர், வைரமுத்தர் என்பவரை மணம் முடித்தார். இந்த வைரமுத்தர் என்பவர் அருணர் என்றவரின் மகன். அருணருக்கு ஐயம்பிள்ளை என்ற ஒரு மகனும் இன்னொரு பெண்ணும். எல்லாமாக மூவர். ஐயம் பிள்ளை ஆலடியில் மணம் செய்தார். பெண், புலோலி வல்லியப்பரை மணம் செய்தார்.

20. மேற்படி கோணாத்தை வைரமுத்தர் தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகள்.

   a. வேலாயுதர்

   b. டாக்குத்தர் சின்னையர்

   c. அம்பிகைப்பிள்ளை.

21. மேற்படி வேலாயுதர்தான், வேலாயுதம் பள்ளிக் கூடத்தைத் தாபித்தவர் என்று மேற்படி பன்னிரண்டாம் பந்தியிலும் குறிப் பிட்டிருக்கிறேன்.

22. அதாவது, சடையரின் இரண்டாந்தாரப் பிள்ளையான வினாசித்தம்பியும், கோணாத்தையின் மகனான வேலாயுதரும் சொந்த மச்சான்மார். அதாவது, வினாசித்தம்பியின் மாமியான கோணாத்தையின் மகன்தான் வேலாயுதர். வேலாயுதருக்கு இரண்டு பிள்ளைகள்:

   a. அருணாசலம்

   b. விசாலாட்சி.

   i. மேற்படி அருணாசலம் அவரின் மாமியான அம்பிகைப் பிள்ளையின் (Mrs. Govintha Pulavar) மகளை மணம் செய்தார்.

   ii. இடாக்குத்தர் சின்னையா என்பவர், சின்னாரின் மகளை மணந்தார்.

   iii. வேலாயுதரின் மகளான விசாலாட்சி, தணிகாசலத்தை மணந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. அம்பிகைப் பிள்ளை, கோவிந்தப் புலவரை மணம் செய்தார்.

மேற்படி கோவிந்தப்புலவர்-அம்பிகைப் பிள்ளை தம்பதியினருக்கு நாலு பிள்ளைகள் பிறந்தனர்:

a. அ. பரஞ்சோதி

b. தணிகாசலம் (Husband of Visaladchi)

c. சிவப்பிரகாசம்

d. ஒரு பெண்.

23. சடையரின் மூத்த தாரப் பிள்ளையான மாட்டு வைத்தியர் விநாயகரும், இரண்டாம் தாரப்பிள்ளையான வினாசித்தம்பியும் தாய் வேறு தந்தை ஒன்றான அரை இரத்தச் சகோதரங்கள் (Half blood brothers). மாட்டு வைத்தியரான விநாயகரின் குடும்பம் பற்றிய தகவலைத் திரட்ட வேண்டும்.

24. கச்சாய் விநாயகரின் கடைசி மகளான கந்தாத்தை என்பவர், திருவம்பல முதலியாரின் அடியிலிருந்து முளைத்து வந்த செகிட்டு ஆழ்வாரை முதலில் திருமணம் செய்தார்.

அதன் பின்னர், கந்தாத்தை இரண்டாம் தாரமாக, சோலிக்கந்தரின் பேரனான இளையவர் என்பவரை மணம் முடித்துக் குண்டிக் கணபதியார் என்ற மகனைப் பெற்றார்.

கந்தாத்தையின் முதல் தாரத்தின் மூலம் வள்ளிப்பிள்ளை என்பவர் பிறந்தார். இந்த வள்ளிப்பிள்ளையின் பிள்ளைகளில் ஒருவரின் பெயர் குலசேகரம். மேற்படி வள்ளிப்பிள்ளையும் குண்டிக்கணபதியாரும் அக்கையும் தம்பியும் அதாவது அரையிரத்தச் சகோதரங்கள் (Half blood brother and sister).

25. சடையரின் இரண்டாந்தார மகனான வினாசித்தம்பியும், கந்தாத்தையின் இரண்டாம் தார மகனான குண்டிக் கணபதியாரும் சகலன்மார்; அதாவது இரண்டு சகோதரிகளைக் கட்டியவர்கள்; சடையரும் கந்தாத்தையும் சொந்தச் சகோதரங்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. வினாசித்தம்பிக்குக் கந்தாத்தை மாமியார்; எனவே, வினாசித்தம்பி குண்டிக்கணபதியாருக்கு மச்சான் முறை.

27. குண்டிக்கணபதியாருக்கு ஐந்து பிள்ளைகள்:

    a. இராசம்மா (Mrs. Kulasegaram)
    b. கனகம்மா (Married & Divorced)
    c. அருணாசலம் (விபரம் தெரியவில்லை)
    d. சுப்பிரமணியம் (விபரம் தெரியவில்லை)
    e. இன்னுமொரு பெண் (வாய் பேசாதவர்)

28. மேற்படி இராசம்மா, குலசேகரம் என்பவரைத் திருமணம் செய்தார்.

29. இந்தக் குலசேகரம் யார் என்றால்:

    a. கந்தாத்தை முதல்தாரமாகச் செவிட்டு ஆழ்வாரைத் திருமணம் செய்தார்
    b. அந்தத் திருமணத்தின் பயனாக வள்ளிப்பிள்ளை என்று ஒரு பெண் பிறந்தார்
    c. வள்ளிப்பிள்ளை என்பவர், கணபதிப்பிள்ளை எனப்பட்ட வேலுப்பிள்ளையை மணம் முடித்தார்

30. வள்ளிப்பிள்ளை வேலுப்பிள்ளை தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகள்:

    a. தங்கம்மர்
    b. பொன்னம்மர்
    c. குலசேகரம்.

    இந்தக் குலசேகரந்தான் மேலே இருபத்தெட்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட இராசம்மாவின் கணவர்.

31. மேற்படி குலசேகரந்தான் குண்டிக்கணபதியாரின் மகளான இராசம்மாவை மணந்தவர். இராசம்மா என்பவர் குலசேகரத்துக்கு மச்சான் முறை. அதாவது குலசேகரத்தின் தாயும் இராசம்மாவின் தகப்பனும் அரை இரத்தச் சகோதரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. மேற்படி குலசேகரத்தின் சகோதரியான தங்கம்மா என்பவர், வேலுப்பிள்ளை கதிர்காமு என்பவரைத் திருமணம் செய்தார் அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள்:

   a. நாகம்மா

   b. வேலுப்பிள்ளை (எருமை வேலுப்பிள்ளை)

33. பந்தி முப்பதில் குறிப்பிடப்பட்ட பொன்னம்மாவின் விபரம் தெரியவில்லை: ஆராய வேண்டும்.

34. மேற்படி குலசேகரம் என்பவர் எருமை வேலுப்பிள்ளையின் தாய்மாமன்; அதாவது வேலுப்பிள்ளையின் தாயின் சகோதரன்.

35. இந்தக் கட்டுரையில் முக்கியமான செய்திகள் சிலவற்றையே சொல்லியிருக்கிறேன். இன்னும் சில செய்திகளைக் குறிப்பிட்டுக் கட்டுரையை நிறைவாக்க வேண்டும். மேற்கொண்டு தகவல்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன். தகவல் தெரிந்தவர்கள் உதவினால் மகிழ்வேன்.

இப்படிக்கு
செ. சிறீக்கந்தராசா
66, உவெஸ்றோ காடின்ஸ்
இல்போட்
எசெக்ஸ்
இங்கிலாந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வத்தம்பியாரின் தாயாரான பாறுவதிப்பிள்ளையின் வேரும் கொடியும்

1. வில்லூண்டி மாணிக்கரின் பெண்சாதியின் மூலவேர் மலையாளம் என்ற சேரநாட்டில் தொடங்குகின்றது. அதாவது குஞ்சித்தம்பி என்ற ஒருவரிலிருந்து தொடங்குகின்றது.

2. குஞ்சித்தம்பி என்பவர் கேரளம் என்ற சேரளத்திலிருந்து குடிபெயர்ந்து வந்த சைவ வேளாளன். இவரும் இவருடைய உறவினரும் மலையாளத்திலிருந்து வந்து வலிக்கண்டியிலும் வல்லிபுரக் குறிச்சியிலும் குடியேறினார்கள்.

3. அந்தக் காலத்தில் 'தானத்தார்' என்பவர்கள்தான் வல்லிபுரக் கோயிலை நடத்தி வந்தார்கள்.

4. மலையாளத்திலிருந்து வந்தவர்கள் தானத்தாரோடு சம்பந்தம் வைத்துக் கொண்டார்கள், வேறு வழி இல்லாமல்.

5. குஞ்சித் தம்பியாருக்கு ஒரு மகன் இருந்தார். அவரின் பெயர் பெரியார்

6. பெரியாருக்கு இரண்டு பிள்ளைகள்
ஒருவரின் பெயர் குஞ்சிநாச்சன்; மற்றவரின் பெயர் நாகப்பர்;

7. நாகப்பர் என்பவர் சின்னாத்தை என்பவரை மணம் முடித்து அவர் இறந்து போனதும் அவரது சகோதரியான நாகாத்தை என்பவரை மணம் முடித்தார்.

8. நாகப்பர்-சின்னாத்தை தம்பதியினருக்கு இரண்டு பிள்ளைகள். ஒருவரின் பெயர் ஏரம்பர், மற்றவரின் பெயர் காராளியார்.

9. நாகப்பர்-நாகாத்தை தம்பதியினருக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தனர்:
    a. பண்டாரியார்
    b. வல்லிபுரம்
    c. செட்டியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

d. பெரியதம்பி

e. பெரிய பிள்ளை

f. இளைய பிள்ளை.

10. அதாவது இரண்டு தாரம் கட்டிய நாகப்பருக்கு எல்லாமாக எட்டுப் பிள்ளைகள்.

11. மேற்படி நாகாத்தைக்கும் நாகப்பர் இரண்டாம் தாரம்தான்.

12. நாகாத்தை முதல் தாரமாகக் கார்த்திகேயர் என்ற ஒருவரை மணம் முடித்திருந்தார். அதன் மூலம் நாகாத்தைக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர்:

a. வள்ளியார்

b. குமாரவேலு

13. மேற்படி கார்த்திகேயர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர்.

14. மேலே நான் குறித்த சின்னாத்தையும் நாகாத்தையும் சகோதரிமார். அதாவது இவர்கள் குழந்தை வல்லியாரின் சகோதரியான பத்தினி யாருக்கும் சின்னப் பொடியாருக்கும் பிறந்த பிள்ளைகள்.

15. குழந்தையன் வல்லியார் என்பவர் ஒரு மாந்திரீகன். அவர் தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்.

16. ஆக நாகப்பரின் குடும்பத்தில் எல்லாமாகப் பத்துப் பிள்ளைகள்; அதாவது, சின்னாத்தை, நாகாத்தை என்பவர்கள் மூலம் நாகப்பருக்கு எட்டுப்பிள்ளைகள்; நாகாத்தைக்கு அவரது முதல் கணவரான கார்த்திகேயர் மூலம் இரண்டு பிள்ளைகள்; எல்லாமாகப் பத்துப் பிள்ளைகள்:

a. ஏரம்பர்

b. காராளியார்

c. பண்டாரியார்

d. வல்லிபுரம்

e. செட்டியார்

f. பெரியதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

g. பெரியபிள்ளை்

h. இளையபிள்ளை்

i. வள்ளியார்

j. குமாரவேலு

17. மேலே குறித்த இளைய பிள்ளையின் கணவர்தான் வில்லூண்டி மாணிக்கர் (Father of Proctor Chelvathamby).

18. செல்வத்தம்பியாரின் தாய்தான் சின்னப்பிள்ளை என்ற இளையபிள்ளை அல்லது பார்வதி.

19. மேற்படி மூத்த பிள்ளை என்ற பெரிய பிள்ளை மாரக்காயில் மணம் முடித்தார். அதாவது மாரக்காயில் வாழ்ந்த நாவலடி ஆழ்வாரின் மகனான சின்னையாவை மணம் முடித்தார்.

20. இந்தச் சின்னையாவும் வில்லூண்டி மாணிக்கரும் நண்பர்கள்; ஒன்றாக வியாபாரம் செய்தவர்கள். இந்த நட்பின் விளைவாகத்தான் மாணிக்கர் அவரது நண்பரான சின்னையரின் மனைவியின் தங்கை யான சின்னப்பிள்ளையை விரும்பி மணம் புரிந்தார். எனவே சின்னையரும் மாணிக்கரும் சகலன்மார்.

21. சின்னையர் - மூத்த பிள்ளை தம்பதியினருக்கு ஏழு பிள்ளைகள்.

22. மேலே பதினாறாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பண்டாரியார் என்பவர் மாரக்காயில் வாழ்ந்த பெருமாள் என்பவரின் மகளை மணம் முடித்தார். இந்தத் திருமணத்தின் மூலம் பண்டாரியாருக்கு நான்கு பிள்ளைகள்:

a. சதாசிவம் (மணம் செய்யவில்ல)

b. அன்னமுத்து (மணம் செய்யவில்லை)

c. வள்ளிப்பிள்ளை (மணம் செய்யவில்லை)

d. பசுபதி (இவர் மாரக்காயில் புவனேஸ்வரி என்பவரை மணம் முடித்தார்)

23. பண்டாரியாரின் தம்பியான வல்லிபுரம் முதல் தாரமாகத் தெல்லிப்பளையில் பொன்னம்மா என்பவரை மணம் முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இரண்டாம் தாரமாக ஐயன் பகுதியைச் சேர்ந்த பாறுபதி என்பவரைக் கட்டினார். இதன் மூலம் வல்லிபுரத்துக்கு இரண்டு பிள்ளைகள்:

a. காமாட்சி

b. மீனாட்சி

காமாட்சி என்பவர் வண்டில்காரக் கதிர்காமர் என்பவரைக் கட்டினார். இவர்கள் நான் அறிய மாணிக்க வாசாவுக்கு முன்னே உள்ள வீட்டில் வாழ்ந்தார்கள்.

24. மேற்படி மீனாட்சி பற்றிய விபரம் தெரியவில்லை.

25. இரண்டாம் தார மனைவியும் இறந்து போக, வல்லிபுரம் என்பவர் மூன்றாம் தாரமாக, சனியன் வேலர் என்பவரின் மகளைக் கட்டினார்.

26. மேற்படி செட்டியார் பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை. செட்டியாரின் மகள், Jailor (ஜெயிலர்) சுப்பிரமணியம் என்பவரைக் கட்டினார் என்று தெரிகிறது.

27. மேற்படி பெரியதம்பி இளவயதிலேயே காலமானார்.

28. மேற்படி பெரிய பிள்ளைக்கு முறையான வேறு பெயர் இருந்திருக்க வேண்டும். சின்னையா-பெரியபிள்ளை தம்பதியினருக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தனர்:

a. கனகம்மா (பொன்னுச்சாமியின் பெண்சாதி)
பொன்னுச்சாமி என்பவர், மேற்படி சின்னையாவின் தங்கையான சின்னம்மாவின் மகள். அதாவது சின்னையாவின் மகளான கனகம்மா அவரின் சொந்த மாமியின் மகனான பொன்னுச்சாமியை மணம் முடித்தார்.

b. இராசையா (இவர் இளமையில் காலமானார்)

c. செல்வவிநாயகம் (இவர் பாக்கியம் என்பவரை மணம் முடித்தார்)
இந்தப் பாக்கியம் செல்வவிநாயகத்தின் சொந்த மச்சாள் அதாவது தாயின் சகோதரனான வல்லிபுரத்தின் மகள். மேற்படி பாக்கியம் தான் இராசேஸ்வரியின் தயாயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

d. சிவக்கொழுந்து (பெண்); இவர் கட்டினது சின்னத்தம்பி என்பவரை் வேறு விவரங்கள் தெரியவில்லை.

e. நாகரத்தினம் (பெண்); இவர் மணம் முடித்தது காந்திச் செல்லத்துரை என்பவரை. இந்தச் செல்லத்துரை நாகரத் தினத்தின் சொந்த மச்சான்; அதாவது, தாயின் சகோதரனான வல்லிபுரத்தின் மகன்.

f. குழந்தைவேலு (முத்தம்மாவின் கணவன்) முத்தம்மா விநாசித்தம்பியின் மகள்; காந்திமதி வேலும்மயிலும் ஆகியோரின் சகோதரி.

g. பார்வதிப்பிள்ளை என்ற இளையபிள்ளை (Mrs.Manickar) மாணிக்கர் தம்பதியினருக்கு எட்டுப் பிள்ளைகள்:

   i. செல்வத்தம்பி (காந்திமதியின் கணவர்)
   ii. பொன்னம்மா (வழக்கறிஞர் பசுபதியின் மனைவி)
   iii. மயில்வாகனம் (வழக்கறிஞர் மார்க்கண்டனின் தகப்பன்)
   iv. தையல் முத்து (Mrs. Kandiah)
   v. வள்ளிப்பிள்ளை (Mrs. Sathasivam)
   vi. இளையதம்பி (Husband of Maheswary)
   vii. தெய்வானை (Mrs. Sabapathipillai)
   viii. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டியப்பரின் வேரும் கொடியும் அதாவது செல்வத்தம்பியாரின் முதலாவது மனைவியின் வம்சாவளி

1. ஆண்டியப்பரின் மறுபெயர் கதிரித்தம்பி.

2. ஆண்டியப்பர் மணம் முடித்தது சின்னப்பிள்ளை என்பவரை.

3. இந்தச் சின்னப்பிள்ளையின் தகப்பனின் பெயர் பெரியதம்பி தாயின் பெயர் மயிலாத்தை

4. ஆண்டியப்பரின் மனைவியின் பெயரை அறிய முடியவில்லை. அவருக்குப் பதினொரு பிள்ளைகள் இருந்தார்கள்.

    i. சந்திரசேகரம் (Post Master)

    ii. பொன்னர் (Married twice; No children)

    iii. குழந்தை ((பெண்) Married Kantar; No Children)

    iv. சிவகாமி (Mrs. Kumar) (had two daughters, Sellammah and Annammah)
    Sellammah Married Chelvatamby and Annammah Married Sangarapillai (Malayan pensioner) of Kalayavoda.

    v. Vallippillai (Mrs of Nalliah alias Chempadaiyar)

    vi. கந்தையா (அம்மையார் என்பவரின் மகளை மணம் முடித்தவர். இவர்களுக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தார்கள். ஆண்களில் ஒருவரான சிவராசா செல்வத் தம்பியாரின் இரண்டாம் மகளான தங்கம்மாவை மணம் முடித்தார்.

    vii. Dr. சபாபதி (இவர் இரண்டு தாரம் மணம் முடித்தார்)

    viii. பாறுபதி (இவர் செல்வத்தம்பியாரை மணம் முடித்தார் முதல் தாரமாக)

    ix. பொன்னம்மா (தும்பளையில் ஆழ்வாப் பிள்ளை என்ற அளவை யாளரை மணம் முடித்தார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x. ஒரு பையன் (இவர் சிறுவயதில் இறந்து போனார்)

xi. பிரக்கிராசி கிருஷ்ணபிள்ளை (இவர்தான் Dr. கும்பேசனனின் தந்தை, இவர் கட்டினது செம்பாட்டில், எழுவெட்டிக் கணபதிப்பிள்ளையின் சொந்தகாரப் பெண்ணை)

கிருஷ்ண பிள்ளைக்கு ஐந்து பிள்ளைகள்:

இரண்டு ஆண்ககள் மூன்று பெண்கள்

a. Dr. கும்பேசன்

b. கி. மகேந்திரன்

c. கி. மணிமேகலை

d. ஒரு பெண் (பெயர் தெரியவில்லை)

e. இன்னுமொரு பெண் (பெயர் தெரியவில்லை)

மேற்படி மணிமேகலை என்பவர் வழக்கறிஞர் வி.கே.சுப்பிரமணியம் என்பவரை மணம் முடித்தார். இந்த வி.கே.சுப்பிரமணியம் என்பவர் வழக்கறிஞரான என்.ஏ. இராசரத்தினத்தின் மைத்துனர்.

5. மேற்படி ஆண்டியப்பரின் மகனான கந்தையரின் இரண்டாம் மகன்தான் செல்வத்தம்பியரின் மகளான தங்கம்மாவைத் திருமணம் செய்த சிவராசா. இந்தக் கந்தையா என்பவர் செல்வத்தம்பியாரின் மூத்த மனைவியான பாறுபதியின் சொந்தச் சகோதரன்.

6. மேற்படி இடாக்குத்தர் சபாபதி முதலாம் தாரமாக அப்புக்காத்துப் பொன்னையாவின் மகளை மணம் முடித்தார். அந்த மகளின் பெயர் தெரியவில்லை.

7. பொன்னையாவின் இன்னொரு மகளான சகுந்தலையைப் பிரக்கிராசி ஈசுவரபாதம் மணம் முடித்தார்.

8. அதாவது இடாக்குத்தர் சபாபதியும் பெரக்கிராசி ஈசுவரபாதமும் சகலன் மார்.

9. Dr. சபாபதிக்கு முதல் தாரத்தின் மூலம் ஒரு பெண் பிறந்தார். அவரின் பெயர் சுந்தரநாயகி. இவரை மணம் முடித்தார் அப்புக்காத்து நவரத்தினராசா. இவர் கணையந் தோட்டத்துக் கண்ணாத்தையின் மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. முதல் மனைவி இறந்ததும் Dr. சபாபதி இரண்டாம் தரம் மணம் முடித்தார். அந்த மனைவியின் பெயர் இராசம்மா. இவர் இராச ரத்தினம் என்பவரின் மகள். இராசரத்தினம் என்பவர், பிரக்கிராசி ஈசுவரபாதத்தின் சகோதரன் Dr. சபாபதிக்கு இராசம்மா மூலம் பிறந்தவர் தான் சந்திரசேகரம் (Medical Representative).

11. பிரக்கிராசி ஈசுவரபாதத்தின் வேரும் விழுதும் எங்கே இருக்கின்றன என்பது தெரியவில்லை.

12. சந்திரசேகரம் என்பவர் ஜெயலட்சுமி என்பவரை மணம் முடித்தார். ஜெயலட்சுமியின் பாட்டனின் பெயர் சட்டம்பி சிவப்பர்.

13. விதானை பெருமாளின் தாயாரான கோணாத்தை என்பவர் கதிர்காமமுதலி என்றவரின் அடியில் வந்த சுப்பிரமணியரின் மகள் என்று வேறொரு கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்தேன். விதானை பெருமாள், பெத்தார் என்பவரின் ஒரு மகளை மணம் முடித்தார்.

விதானை பெருமாளின் மனைவியின் பெயர் என்னவென்று தெரியவில்லை. ஆனால் அந்த மனைவிக்கு ஒன்பது சகோதரிகள் இருந்தார்கள். இந்தப்பத்துப் பெண்களின் தகப்பனின் பெயர்தான் பெத்தார் என்பது. பெத்தாரின் மனைவியின் பெயர் தெரியவில்லை. பெத்தாருக்கு ஒரே ஒரு மகனும் இருந்தார். அந்த மகனின் பெயர் நரசிங்கர் என்பது. அவர் ஒரு சமஸ்கிருதப் பண்டிதர். பெத்தாரின் மனைவிக்கு வள்ளியார் என்ற ஒரு சகோதரனும் இருந்தார். வள்ளியாரின் வழியில் வந்த ஒருவருக்குச் சட்டநாதர் என்பது பெயர். இந்தச் சட்டநாதரின் மகன்தான் மண்டலாய் என்ற குமார சாமி. இந்தக் குமாரசாமிதான் செல்வத்தம்பியின் மூத்த மகளான இராசம்மாவை மணம் முடித்துச் சகுந்தலா என்ற மகளைப் பெற்றவர் (Mrs. Vijayakaran)

14. விதானை பெருமாளின் ஒரு மகளான தையல் முத்து என்பவர் புற்றளை வேலப்பர் என்பவரை மணம் முடித்தார் என்று முன்னரே கூறியிருக்கிறேன். புற்றளை வேலப்பருக்கு ஒரு சகோதரனும் இருந்தார். இந்தச் சகோதரனின் பெயர் கணபதிப்பிள்ளை. இவருடைய மகன்தான் சங்கரப்பா. சங்கரப்பாதான் சின்னையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சியப்புவின் தகப்பன். அதாவது மாணிக்கரும் சங்கரப்பாவும் ஒன்றுவிட்ட சகோதரங்கள், செல்வத்தம்பியார்க்குச் சங்கரப்பா சிறிய தகப்பன்.

15. இனி புற்றளை வேலப்பரின் வேர் என்ன என்று தேடல் வேண்டும். அதையும் தேடிமுடித்தால் செல்வத்தம்பியாரின் வம்ச ஆவளி ஓரளவுக்கு நிறைவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பின் சிகரமாய்த் திகழ்ந்த என் அருமை அன்னையே அன்புத் தெய்வமே!

குடும்பத்தின் குலவிளக்காய், தோற்றத்தின் சுடரொளியாய், அன்பின் இருப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், கருணையின் வடிவாய், பண்பின் சிகரமாய், யாவரின் மனதிலும் ஓர் உதய சூரியனாக விளங்கிய என் அருமை அன்னையே! அன்புத் தெய்வமே!அணையாத தீபமே! பண்பின் சிகரமே! எங்கள் எல்லோரையும் பிரிந்து திக்குத்தடுமாற வைத்துக் காலன் உங்களை அழைத்து விட்டானே என்று நோக்கும் போது, ஆண்டுகள் பல சென்றிடினும் மாறாது எம் கவலை. நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நீங்காத நினைவுகளும், மங்காத பாசமும், நேசமும், திருவுருவும் எங்கள் இதயமெல்லாம், இல்லமெல்லாம் என்றென்றும் நின்று நிலைத்திடும் என்பது திண்ணம்.

ஆண்டுபல ஆனாலும் அன்புமுகம் மறையவில்லை. அழியாத நினைவலைகள் ஆட்டிப் படைக்கின்றனவே. அன்போடு எம்மை அரவணைத்துப் பாலூட்டி, அமுதூட்டி வளர்த்தெடுத்த அன்னையை எப்பிறப்பிற் காண்பேன் நான் இனி?

மாணிக்கம் போன்ற அருமை மக்கள் ஒன்பது பேரைப் பெற்று வளர்த்து, அறிவு புகட்டிச் சிறப்புற மாங்கல்யம் கண்டு களித்துப் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் யாவரையும் அன்போடு கண்டு அகமகிழ்ந்தீர்.

அன்னையே நீங்கள் புலோலி கிழக்கில் 'அண்ணாவி' என்று பெருமையோடும் அன்போடும் அழைக்கப்பட்ட தலைசிறந்த பெருமகன் வினாசித்தம்பி அவர்களுக்கு மகளாகப் பிறந்து இதம் தரும் இளமைப் போதில் இயன்ற நல்லறங்கள் செய்து முதிர்ந்திடும் பருவம் தன்னில் முனகிடும் குடும்பத்தார்க்கு எழுந்திடும் இடர்கள் துன்பம் எய்தாமல் காத்து நின்றீர். உங்கள் தவப் பயனால் தம்பசிட்டியில் வரலாற்றுச் சிறப்பும், பண்பும், ஞானச் செழிப்பும், கலையின் கவினும் கொண்டு விஞ்ஞானிகளையும் மெய்ஞ்ஞானிகளையும், பண்டிதர்களையும், பிரபல வர்த்தகர்களையும், சமய, சமூக சேவையாளர்களையும் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் கொடைவள்ளல் களையும் வாழையடி வாழையாக ஈன்றெடுத்த பெருமை பெற்ற மாணிக்கர் குடும்பத்தின் மூத்த மகனாகப் பிறந்த பிரபல வழக்கறிஞர் செல்வத்தம்பி அவர்களை 1937ஆம் ஆண்டு திருமணம் செய்து, பிறந்த மண்ணாகிய கணையந்தோட்டத்திற்கும் தம்பசிட்டிக்கும் பெருமை சேர்த்தீர். மேலும் உங்கள் வீட்டிற்கு அருகே அமைந்த கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு நீங்கள் ஆற்றிய தெய்வீகத் தொண்டு மகத்தானது. மேலும் கண்ணகை அம்பாளை நேரடியாகக் கண்டதாகவும் பல தடவை எனக்கும் கூறியிருக்கிறீர்கள். உண்மையிலேயே உங்களின் தெய்வ சிந்தனையினாலும் தந்தையின் தர்ம சிந்தனையினாலும் தான் உங்கள் பிள்ளைகள் இம் மண்ணிலே நற்பிரஜைகளாக வாழ்ந்து வருகிறார்கள். இதை எவரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

மேலும் சிரித்த முகம், இறைபக்தி, நிறைந்த நெஞ்சம், சினம் அறியாத சிரிப்பு, இன்னல் விளைவிக்காத மனப்பான்மை, தளராது உதவும் கரங்கள, கடமையில் கண், சமூக சேவையில் அளவிடா நாட்டம், இத்தனையும் ஒருங்கிணைந்த புலோலியம்பதியில் எல்லோரின் நெஞ்சிலும் வாழ்ந்த பெருமகள் என் அன்புத் தெய்வம். உண்மையிலேயே உங்கள் மறைவு யாவரையும் ஆற்றொணாத்துயரத்தில் ஆழ்த்தியிருக்கும் என்பது உண்மை.

உயர்ந்த இலட்சியங்களையும், சிந்தனைத் தெளிவையும், செய லாற்றும் திறமையையும் பெற்றிருந்த என் அன்னை தன் வாழ்க்கையில் சந்தித்த இடர்கள், பிரச்சினைகள் யாவற்றையும் புன்னகையுடன் எதிர்கொண்டு வெற்றி கண்டாரெனின் அதன் இரகசியம் என் அன்னை தம் வாழ்வில் கைக்கொண்ட அமைதி நிறைந்த தூய்மையான இறை பக்தியே என்பதை யாவரும் அறிவர்.

இத்துடன் நீங்கள் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நால்வகை நெறியில் நலம்பெற வாழ்ந்து நல்லோர் போற்ற விளங்கிய குன்றினில் ஏற்றிய தீபம் போல் நம் மத்தியில் பிரகாசித்த ஒரு பெருமகள். எனினும் ஒரு குடும்ப விருட்சமாக, பாசத்தின் வேராக நெடுநிழல் பரப்பி உற்றார் உறவினர்கள் மற்றும் அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக வாழ்ந்த என் அன்னையின் பிரிவு உண்மையிலேயே ஒரு பேரதிர்ச்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் அனைவரும் ஒரு பாய்மரம் சாய்ந்த ஓடம்போல் நட்டாற்றில் திசைமாறி நின்று தவிக்கின்றோம்.

யோகர் சுவாமிகள் கூறியது போல 'எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்' என்ற அவரின் வாக்கு நமக்கு ஓரளவு நிம்மதியை அளிக்கிறது. ஆகையினாலே நாம் யாவரும் கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

உங்கள் மூத்த மகன்
மாணிக்கவாசகர்

*வேட்டன பெறாமை துன்பம்*
*வீழ்நரைப் பிரிதல் துன்பம்*
*மோட்டெழில் இளமை நீங்க*
*மூப்புவந் தடைதல் துன்பம்*
*எட்டெழுத் தறிதல் இன்றி*
*எள்ளற்பா டுள்ளிட் டெல்லாம்*
*சூட்டணிந் திலங்கும் வேலோய்*
*துன்பமே மாந்தர்க் கென்றான் -*
*(சீவக சிந்தாமணி 2799)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அம்மா காந்திமதி

"தா என்று கேட்க மாட்டன் மேனை! தந்தால் வேண்டாமென்று சொல்லாமல் இரண்டு கையாலும் வேண்டுவன்" என் அம்மாவின் மனத்திட்பம் இது தான்.

என் அருமையான அம்மாவை இலண்டனிலிருந்து நினைக்கும் போதெல்லாம் இரண்டு விடயங்கள் பளிச்செனத் தோன்றும். ஒன்று அம்மாவின் அபாரத் துணிச்சல்; அதாவது எதற்கும் கலங்காத மனப் பக்குவம்; மற்றது 'தா' என்று இரக்காத செம்மாப்பு.

1962 ஆம் ஆண்டு நான் என் பட்டப்படிப்பை இந்தியாவில் முடித்து விட்டுப் பருத்தித்துறைக்கு வந்து விட்டேன். 1958 ஆம் ஆண்டு யூலை மாதம் 23ஆம் தேதி பொல்லநறுவையில் (கிரித்தலையில்) வைத்துச் சிங்களக் காடையர் அய்யாவுக்கு அலவாங்கால் அடித்த அடியோடு அய்யாவின் அனுராதபுரச் சட்டத் தொழிலும் சரிந்தது. அய்யாவும் ஊருக்கு வந்து விட்டார். 1960 இல் வருவாயும் வரண்டு விட்டது. பென்சன் என்று சொல்ல எதுவும் கிடையாது. அய்யாவின் ஓட்டைக்கை இயல்பை உணர்ந்து, அய்யாவுக்குத் தெரியாமல் அம்மா சேர்த்து வைத்த அற்ப சொற்ப பணத்தையும், சீட்டுப் பிடித்துச் சேர்த்த காசையும் வைத்துக் கொண்டு அம்மா சிக்கனமாகக் குடும்பம் நடத்தியதைக் கண்டு நான் பல தடவை வியந்திருக்கிறேன். நானும் அண்ணன் மாணிக்கரும் 1962 இல் தொழில் பார்க்கத் தொடங்கியதன் பின்னர் அம்மாவின் சுமை ஓரளவுக்குத் குறைந்தது என்றாலும், அம்மாவின் குடும்ப நிர்வாகத்தைப் பாராட்டியே ஆக வேண்டும். 1975 ஆம் ஆண்டளவில் என் அய்யா அவரது 86 ஆவது வயதில் படுத்த படுக்கையாகி விட்டார். அன்றிலிருந்து அய்யா காலமாகின்றவரை என் அம்மா என் அய்யாவிக்குச் செய்த பணிவிடையை நினைத்தாலே கண்ணீரும் ஆனந்தக் கண்ணீரும் வரும். ஊரே மெச்சும்படி என் அம்மா நடந்து கொண்டார். அப்படியான ஒரு மனைவியை நான் வேறெங்கும் கண்டதில்லை.

அப்படிப்பட்ட அம்மாவை, அவர் எங்கள் அய்யாவைக் கவனித்த முறையில் கவனிக்க நமக்கு முடியவில்லை. அஞ்சாம் வகுப்புக்கு மேல் அம்மா படிக்கவில்லை. இருந்தும் தோற்றத்தில் வெள்ளைக்காரக் கணவன் என்று சொல்லத்தக்க என் அய்யாவை மணந்து, அய்யாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியக்கும்படி அறிவாலும் ஆற்றலாலும் வளர்ந்தார் என்பது அம்மாவின் சிறப்பு.

பிறர் பிள்ளை தலை தடவி மகிழ்ந்த என் அய்யா அவரின் பிள்ளைகளாகிய எங்களைச் சரியாக வழிநடத்தவில்லை என்பது பொதுவான குறை. பள்ளிக்கு ஒளித்துக் கள்ளமாங்காய் பிடுங்கி மகிழ்ந்த என்னை, துள்ளியும் கிள்ளியும் பள்ளிக்கு அனுப்பிப் பட்டதாரி ஆக்கி வழக்கறிஞன் ஆக்கிய பெருமை என் அம்மாவையும் அண்ணன் மாணிக்கவாசகனையுமே சாரும்.

அம்மாவின் உடல் ஐம்பூதத்துடன் கலந்து விட்டது. ஆனால் அவரின் உயிர் மீண்டும் நம் குடும்பத்தில் வந்து பிறக்கும்: வந்து வழி காட்டும்: அந்த நம்பிக்கையில் அம்மாவின் நல்ல நினைவுகளைச் சுமந்திருப்பேன்.

இளைய மகன் சிறீயும்
மாதினியும்
அருணனும்
சாம்பவியும்
கைலாவும்
கீரனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவுக்கு நான் செய்யும் கைம்மாறு

நான் பிறந்த நாளிலிருந்து அம்மா இறக்கின்ற வரைக்கும் அம்மாவோடு ஒரே வீட்டில் இருந்த பெருமை எனக்கு மட்டும் தான் இருந்தது என்பதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. அம்மாவோடு தொடர்ச்சியாக வாழ்ந்ததால் அம்மாவின் குணங்களையும் ஒருசேர அறிந்தவள் நான். என் அய்யா காலமாகும் முன்னரே என் கணவர் கதிர்காமத்தம்பி காலமாகி விட்டார். அந்த வெறுமையை என் அம்மா புரிந்து கொண்டு என்னை அரவணைத்து வாழ்ந்தார். எனக்கு ஏற்பட்ட விரக்தியை அறிந்து கொண்டு எனக்கு அவ்வப்போது இருந்த சீற்றங்களையும், சினப்புக்களையும் பொறுத்து நடந்து கொண்டார்.

என் அம்மா என் அய்யாவைப் பராமரித்தது போல் வேறெங்கும் பார்த்ததில்லை. துன்பத்தில் துவளாமல், இன்பத்தில் இறுமாக்காமல் இருந்து வந்த என் அம்மா எனக்குக் கற்றுத் தந்த பாடங்கள் பல. எங்கள் கண்ணகை அம்மாள் மீது அம்மா கொண்டிருந்த நம்பிக்கை அபாரம். அந்த நம்பிக்கை என்னையும் ஆட்படுத்தி அடிமைப்படுத்தியிருக் கிறது. அம்மா கண்ணகை அம்மாளுக்குச் செய்து வந்த பணியைத் தொடர்ந்து செய்வதையே அம்மாவுக்கு நான் செய்யும் கைம்மாறாக நினைக்கிறேன்.

அன்புள்ள பத்மா

*ஆபத்துக் குதவாப் பிள்ளை*
*அரும்பசிக்கு உதவா அன்னம்*
*தாபத்தைத் தீர்க்காத் தண்ணீர்*
*தரித்திரம் அறியாப் பெண்டிர்*
*கோபத்தை அடக்கா வேந்தன்*
*குருமொழி கொள்ளாச் சீடன்*
*பாபத்தைத் தீராத் தீர்த்தம்*
*பயனிலை ஏழுந்தானே*

*(விவேக சிந்தாமணி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அம்மா

நாம் பிறந்த நாள் தொட்டு எம்மைத் தாக்கும் வெய்யிலுக்கும் மழைக்கும் குடையாய், காற்றுக்கும் வெள்ளத்துக்கும் அரணாய் இருந்து வழிமாறித் தடம் புரளாமல் ஏதோ ஒரு வகையில் ஓரளவாவது கல்வி புகட்டி, இறுதிவரை நல்வாழ்வளித்த என் தாய்க்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

எவருக்கும் சிரம் கொடாமல் நீங்களும் அதிகம் சிரமப்படாமல் கண்ணகை அம்மனே துணை என்று கூறிக்கொண்டே இறைவனடி சென்று விட்டீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எனது பிரார்த்தனைகள் என்றும் உண்டு.

தங்கள் மகன் நவம் (கனடா)<br>
மருமகன் மனோகரா<br>
பேரப்பிள்ளைகள் நவநீதன், மைதிலி

*படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்*<br>
*உடைப் பெரும் செல்வர் ஆயினும் இடைப்படக்*<br>
*குறுகுறு நடந்து சிறுகை நீட்டி*<br>
*இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்*<br>
*நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்*<br>
*மயக்குறு மக்களை இல்லோர்க்குப்*<br>
*பயக்குறை இல்லைத் தாம் வாழு நாளே.*

*(புறநானூறு- 188)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமுள்ள அப்பாச்சி

அனைவரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பாசத்துடனும் பழகிய எமது அப்பாச்சியை இறைவன் எம்மிடமிருந்து பிரித்துச் சென்றது எம்மைப் பெரும் துயரில் ஆழ்த்துகின்றது.

அப்பாச்சி தான் வாழ்ந்த காலத்தில் எமக்குக் காட்டிய அளப்பரிய பாசத்தை நினைத்துப் பார்க்கும் போது எம்மை அறியாமலே கண்ணில் நீர் வழிகிறது. அவர் 'மேனை' என்று பாசத்துடன் அழைக்கும் குரல் இப்போதும் எமது காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

அவர் மற்றவர்களை அன்புடன் உபசரிக்கும் பண்பும் விருந்தோம்பலும் எங்களை மிகவும் கவர்ந்து இருந்தது. குறிப்பாக அவர் பேரப்பிள்ளைகளின் மீது காட்டிய பாசம் அளப்பரியது. இலங்கையில் நாம் வசித்த காலத்தில் அப்பாச்சி வீட்டிற்கு அடிக்கடி செல்லும் வாய்ப்பு எமக்குக் கிடைத்ததையிட்டுப் பெருமை அடைகின்றோம். அப்பாச்சி தரும் தேநீரும் சிற்றுண்டிகளும் குறிப்பாகப் பொரி விளாங்காயும் தட்டை வடையும் இப்போதும் எமது நாவில் சுவைத்துக் கொண்டிருக்கின்றது. எதையும் நேரடியாகவே பேசும் கள்ளம் கபடமற்ற உயர்ந்த உள்ளம் கொண்டவர் எங்கள் அப்பாச்சி.

இவ்வுலகில் அனைவரும் நலமுடனும் வளமுடனும் வாழ வேண்டுமென்று வாழ்ந்து சென்ற அந்த ஆத்மா 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று நினைத்துத் தினமும் அருகில் இருக்கும் கண்ணகை அம்மனிடம் சென்று பக்தியோடு தொழுவார். தொழுவதோடு நின்று விடாமல் அம்மனுக்கு இறுதிக்காலம் வரை திருத்தொண்டுகள் செய்தார். அத்துடன் பேரப்பிள்ளைகளையும் திருத்தொண்டு செய்ய ஊக்குவித்தார்.

இப்படியானவருக்குப் பேரப்பிளைகளாய்ப் பிறந்ததற்காக என்றும் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றோம்.

திருவாதிரை தினத்தில் இறைவனடி சேர்பவர்கள் நேரடியாகவே சொர்க்கதிற்குச் செல்வார்கள் என முன்னோர்கள் சொல்வார்கள். எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாச்சியும் சொர்க்கத்தில் இருப்பார் என்பதில் சந்தேகமில்லை. என்றும் அப்பாச்சி தெய்வமாக இருந்து எமக்கு வழி காட்ட வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

"இரவல் தந்தவன் கேட்கின்றான் அதை இல்லையென்றால் விடுவானா"
"உறவைச்சொல்லி அழுவதினால் உயிரை மீண்டும் தருவானா"

என்ற தத்துவத்தை உணர்ந்து அவரது பிரிவில் ஆறுதலும் தேறுதலும் அடைகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
பேரப்பிள்ளைகள்
மதி, ஆதி, குமுதினி, சிறினி.
நெதர்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மாவுக்கு

பாசமுள்ள என் அம்மாவே! பாலூட்டிச் சீராட்டி எம்மை வளர்த்த அம்மாவே! நவரத்தினங்களைப் பெற்றெடுத்த என் அம்மாவே! உன் பிள்ளைகளை ஊர் போற்ற வளர்த்தெடுக்க நீங்கள் பட்ட கஷ்டம் நாம் அறிவோம்! ஊர் அறியும்.

எனக்காக நீங்கள் பட்ட கஷ்டங்களை நான் உணர்கிறேன். என்னைப் பாதிரி பள்ளி என்ற ஆட்லிக் கல்லூரியில் சேர்த்து என்னை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர நீங்கள் காட்டிய ஆர்வமும் முயற்சியும் என்னை என்றும் விட்டகலாது. பாதிரி பள்ளியில் படிக்கும் பிள்ளையென்று எனக்கு முன்னுரிமையளித்து எனக்குக் கல்விதந்த தாயே உங்கள் பிரிவை எப்படியம்மா தாங்கிக் கொள்வேன்?

உங்கள் பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவதுடன் இறை பக்தியிலும் சிறந்து விளங்க வேண்டி, எம் குலதெய்வமாம் அம்மாள் ஆச்சிக்கு வருடம் தோறும் எல்லாப் பிள்ளைகளையும் காவடி எடுக்கச் செய்தும், சரியைத் தொண்டும் செய்ய எம்மை ஊக்கப்படுத்தி நிறைவு கொண்டீர்கள்.

கைக்குழந்தையாய் நான் இருந்த வேளை, கைதவறி என் தாய்மாமன் தரையிலே போட்டுவிட, பதறித்துடித்துப் போன நீங்கள், குழந்தை சேமமுடன் நலம்பெற வேண்டி இறைவனுக்கு நேர்த்தி வைத்து, அன்று தொடக்கம் உங்கள் தள்ளாத வயது வரை எனக்காக அன்று ஏகதசி விரதம் நோற்று என் உயிர் காத்த என் தாயே எப்பிறப்பில் காண்பேன் உங்களை இனி?

ஊரிலே என்ன நிகழ்வு நடந்தாலும் முதல் ஆளாக நின்று உதவிகள் செய்து, அயலவரின் அன்பைப் பெற்றதாயே, அம்மாள் ஆச்சியின் அருள் பெற்றதாயே, அந்தப் பலனால்தானோ என்னவோ உங்களுக்கு எவருக்கும் கிடைக்காத பேறாக மார்கழித் திருவாதிரைத் திருநாளில் குலதெய்வமாம் கண்ணகி அம்மாள் ஆச்சி தன்னிடம் உங்களை அழைத்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தெய்வமே உங்களை நான் கடைசியாக வந்து பார்த்தபோது, ஒருநாளும் இல்லாத திருநாளாய் என்னைக் கட்டிப்பிடித்து அழுதீர்களே. காலன் உங்களை அழைக்கப் போவதைக் காலத்தே உணர்ந்துதான் அன்று அவ்வாறு அழுதீர்களோ! என் தாயே! இப்பிறப்பில் மட்டுமல்ல ஏழு பிறப்பிலும் உங்களது பிள்ளையாய் வாய்க்க அம்மாள் திருவடி நிழலில் குடியேறிய நீங்கள் தான் எனக்கு வரமளிக்க வேண்டும் தாயே. என் உயிர் உள்ளவரை உங்களை என் இதயக் கோவிலில் இருத்திப் போற்றிப் பூசிக்கின்றேன். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திக்கின்றேன்.

உங்கள் நினைவால் வாடும்
உங்கள் மகன் ஆனந்தன்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுள்ள நினைவுகள்

மாமி என்ற வார்த்தையில் நாட்டம் எனக்கதிகமில்லை-எனவே அம்மா என்றோ அம்மப்பா என்றோ தான் அழைத்தேன். இடையில் இணைந்த உங்கள் உறவினால் பெற்ற உதவிகள் நன்மைகளுக்காய் நன்றி சொல்லி வழியனுப்ப விழைகின்றேன்.

1. எம் திருமணத்தைத் தேவாலயத்தில் வைக்க நான் விரும்பி எழுதிய கடிதத்தை மதித்து, நிறைவேற்று அதிகாரமுள்ள குடும்பத்தலைவியாகப் பிள்ளைகள் அனைவரையும் ஒருங் கிணைத்து ஒரு குடைக்கீழ் கொண்டு வந்து சிறப்பான திருமணத்தைத் தேவாலயத்தில் நடத்தி வைத்த தன்மையை நினைத்து நெஞ்சார்ந்த நன்றிகளைச் செலுத்துகிறேன் பணிவாக.

2. பசப்பு மொழிகள் இல்லை பரிதாப வார்த்தையில்லை தேவை, உதவி என்று கண்டால் விரைந்து செய்யும் உயர்ந்த உள்ளம் உங்களிற் கண்டேன்.

   இந்தியன் ஆமியின் கெடுபிடியில் இடம் பெயர்ந்து புலோலிக்கு வந்து இளையமகன் கிருசாந்தைப் பெற்ற போது, தாயாக நின்று ஒரு மாத காலமாக அன்புடன் பராமரித்து, ஆரோக்கிய உண வளித்து அளித்த ஆதரவை நினைத்து நன்றி கூறுகின்றேன். எப்படி இவர்களைச் சமாளித்தீர்கள் என்று பலர் கேட்ட போது, என்னத்தைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது? என்று அன்றும் புரியவில்லை இன்றும் புரியவில்லை. சிறுசிறு சுகவீனம் பிள்ளை களுக்கும் எனக்கும் ஏற்பட்ட வேளைகளில் நுணாவிலில் வந்து எம்முடன் தங்கி நின்று செய்த உதவிகள், தந்த ஆதரவுகளை எண்ணுகிறேன் நன்றியுடன்.

3. அவுஸ்திரேலியாவுக்கு வரவென்று Bye சொல்லப் புலோலிக்கு வந்தபோது, 5000 ரூபாயைக் கையிலே திணித்துத் தேவைப்படும் வைத்திரு மோனை என்று சொன்ன போது வேண்டாம் வேறு இடத்தில் மாறலாம் என்றேன். உங்களுக்கு அதிகம் தேவைதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும், இதை வைத்திருமோனை அவசரத்திற்கு உதவும் என்று சொன்ன வார்த்தைகளை நன்றியுடன் நினைக்கிறேன்.

4. 'மாமியார் மெச்சிய மருமகள்' என்று உங்கள் மருமக்களில் சிலர் கேலியாக எனது காதில் படக்கூறியபோது எதை வைத்துச் சொல்கிறார்கள் என்று இன்றும் புரியவில்லை.

உங்களிடம் பெற்ற உதவிகள், அடைந்த நன்மைகள், கண்ட அனுபவங்கள் யாவற்றிற்கும் நன்றி, நன்றி என்று கூறி விடைதர விரும்பும்....

"நன்றி மறப்பதுநன்றன்று-நன்றல்லது
அன்றே மறப்பது நன்று".

மருமகள்
ரதி-குலராஜா
அவுஸ்திரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே உன்தாள் பணிந்தேன்!

பத்துமாதம் சுமந்து, பாலூட்டிச் சீராட்டி,
பத்திரமாய், பாதுகாப்பாய், வளர்த்தாயே என் அம்மா!
பத்தில் ஒன்று குறைவாய் மொத்தம் ஒன்பது பெற்றாய்.
அத்தனையும் ஆரோக்கியமாய் அவனியில் வலம்வர வைத்தாய்
அம்மா
கட்டிய கணவனையும் பெற்ற பிள்ளைகளையும்
எக்குறையும் இல்லாமல் காத்துப் போற்றினாய்.
இளமையில் உன் உருவம் என்கண்ணிற் தெரிகிறது;
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் கண்ணியமும்
கட்டுப்பாடும் கலந்து கம்பீரமாய் இருந்த காலங்கள் என் மனதில்
நிழலாடுகின்றன.

அம்மா என்றால் அனைத்தும் அதில் அடங்கும் என்பர்
கட்டி அடித்தும் கட்டி அணைத்தும் அன்புடன் நீ வளர்த்தாய்
அம்மனைப்போல் அவனியிலே பவனி வந்த அன்னையே உன்னை
நினைத்து நினைத்து அழுகின்றேன்.

பசி என்று இருந்ததில்லை - பகல் இரவு பாராமல்
பண்ணி வைப்பாய் பலகாரம்;
பள்ளி சென்று திரும்பியதும் - தின்னப்பல தின்பண்டம்
ரின் ரின்னாய் செய்து வைப்பா;
எட்டுப்பெடியளுக்கும் எப்படித்தான் செய்தாயோ
என் அருமை அம்மாவே!

தோசை சுட்டால் சுற்றியே வட்டமாயிருந்து
எனக்குத்தா! எலித்தோசை, கொம்பு வைத்த மான்தோசை,
சிங்கமுகத்தோசை
குட்டிமுயல் எனக்கு வேணும் - என்று
எட்டும் ஒன்றாகக் கேட்கக் கேட்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு சட்டி வைத்து கேட்ட எல்லா முகத்தோசையும் கடகட
வென்று ஒரே சுவையாய்த் தினம் தினம் தின்றகாலம்
பசு மரத்தாணிபோல் பதிந்த நெஞ்சம் பதறுகின்றதின்று.

கடைசியாக நான் உன்னைக்கண்டு ஆண்டு இரண்டு உருண்டது;
விரைந்து நான் மறுதடவை பங்குனியில் கண்டிடுவேன்
கவனமாய் இரு! என்றேன்.
கவலையுடன் சரி என்றாய்- உன்கவலை
அன்று எனக்கு விளங்கவில்லை - நான் காணாமல்
நீ சென்று விடுவாய் என்று தெரிந்திருந்தால் - பறந்தே அன்று
வந்திருப்பேன்.

நீ பறந்தாய் என்ற செய்தி - தம்பி எனக்குச் சொன்னபோது
செய்வதறியாது தலை சுற்றியே நான் நின்றேன்.
மறு செய்தி மனதில் ஒரு சிறு ஆறுதல் - அக்கா தந்த செய்தி அது
இறுதி மூச்சில் உன் வார்த்தை 'குலம் வந்து விட்டானோ' என்று
கேட்டாய்
'வந்து விட்டான்' என்று பதில் கேட்டு - பக்கத்தில் நின்றவரை
எட்டிப்பிடித்து வந்து விட்டாயோ மோனை! என்றபடி
உன் வாயின் வார்த்தைக்கு நிரந்தரமாய் முற்றுப்புள்ளி வைத்தாய்
என்ற செய்தி உடலை உலுக்கியது;
உள்ளம் உருகியது-இறுதியில்
உன் அருகில் நான் நிற்க வேண்டும் என்ற என் விருப்பம்
நீ அறிவாய்!

அப்படியே நான் நிற்கிறேன் என்ற நினைப்போடு
நீ சென்றாய் - அது போதும்.

நூறாண்டு நீ வாழ்வாய் என்று நான் நினைத்திருந்தேன்.
ஐந்தாண்டைக் குறைத்து நீ அலையாய் உலையாமல் அருகிருப்போர்
சீ! என்று சீறாமல், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து -
தெய்வத்துடன் ஒன்றாகி விட்டாய் !!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அம்மா! நான் என்றும் உன்நினைவில் வாழ்கின்றேன்.*
*இன்னொரு பிறவி இருப்பது உண்மை என்றால்*
*உன் மகனாய் நான் பிறக்கத் தந்திடுவாய் உன் ஆசி!!*
*தாயே உன் தாள் பணிந்தேன்!!!*

வணக்கம்
என்றும் அன்னையின் நினைவில்
மகன் குலம் (குலராஜா)
சிட்னி - அவுஸ்திரேலியா

*கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும் மான்வயிற்றில்*
*ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்*
*பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார் யார்*
*நல்லாள் பிறக்கும் குடி*

*(நான்மணிக்கடிகை - 4)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மா! மாமி! அப்பாச்சி!**

**நீங்களே**

**நாம் வணங்கும் தெய்வம்**

"எங்களைச் சொர்க்கத்திலிருந்து ஆசீர்வதியுங்கள்"



மகன்

துரை மருமகள் கல்பனா

பேர்த்தி கிருத்திகா

*இருளே உலகத்து இயற்கை இருள் அறுக்கும்*
*கைவிளக்கே கற்ற அறிவுடைமை கைவிளக்கின்*
*நெய்யே தன் நெஞ்சத்து அருளுடைமை நெய் பயந்த*
*பால்போல் ஒழுக்கத்தவரே பரிவிலா*
*மேலுலகம் எய்து பவர்.*

*(அறநெறிச் சாரம் - 146)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அப்பம்மாவுக்கு

அன்பின் அப்பம்மா இறுதிமூச்சு வரை
கம்பீரமாய் வாழ்ந்து எமக்கும், வாழும்
கலை கற்பித்து தான் எப்படி இருந்தாலென்ன
புத்திரரும், பேரன்மாரும் வாழ்வில் உயர்ந்தார்கள்-என்ற நினைப்பே
போதுமென்று மனதார எமக்கு ஆசி அளித்து
உன் இன்னுயிரை நீத்து விட்டாய்

பெருநாள் என்றால் கோவில் சென்று-முதன்
முதல் வீடு உன் வீட்டுக்குத்தான் என்று சொல்லி
எம்மை எமது தாய் அழைத்து வருவாள்
உனது ஆனந்தக் குடிலில் குதித்தோடி வந்து
அடுப்படியில் குந்தி, பெட்டியில் தோசையும்
சம்பலும் அன்புடனே அணைத்துக் கொஞ்சி
பசியாறும் வரை தந்த அன்புள்ளத்தை இனி எப்பொது காண்பேன்.

கண்ணகை அம்மனுக்குக் காவடி எடுத்து
அப்பம்மாவுக்கு முன்னால் ஆட வேண்டும் என விரும்பி
உன் முன்னால் ஆட, நல்லாய் ஆடுகின்றாய்,
எனது மனம் மகிழ்ந்தது எனச் சிரித்துக்களைத்த பேரனுக்கு
சோடா கொடுக்கச் சொல்லி உருகிய அப்பம்மாவை எப்போது
காண்பேன்?

இந்த வயதிலும் பேரனை அழகு பார்க்க
வளர்ந்த பின்னும் வீடு தேடி வந்த போது
முகம் கழுவிப் பவுடர் போடு எனக் கட்டளையிட்டு
தேத்தண்ணி குடிச்சிட்டுப் போடா என்று
உடல் தளர்ந்து வருத்தமுற்ற நிலையிலும்
அன்புக்கட்டளையிட்ட அப்பம்மாவை எப்போது காண்பேன?
உன் பேரன்மார் பலர் பல்வேறு துறைகளில் உயர்ந்து நின்றாலும்,
உன் கணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையில் நீதிவான் ஒருவன் வரவேண்டும்
என்ற கனவை நிறைவேற்ற உனது அன்பும்
ஆசீர்வாதமுமே காரணம் என்றால் அது மிகையாகாது!

நடைதளர்ந்த நிலையிலும் உனக்கிருந்த
மிடுக்கும், கம்பீரமும் எம் எல்லோருக்கும்
ஒரு வாழ்க்கைப் பாடம், நடை தளர்ந்த போதும்
நம்பிக்கை தளராத உனது வாழ்க்கை உனது
புத்திரருக்கும், பேரன்மாருக்கும் ஓர் உன்னத தத்துவம்.

உனது மிடுக்கும் கம்பீரமும், தன்னம்பிக்கையும்
துணிச்சலும் நீதிபதியாகிய எனக்கு ஒரு
முன்னுதாரணம் நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உனது பேரர்களும், பேர்த்திகளும் உன்
நினைவு அகலாது உன்னுடனே இருப்பார்கள்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறேன்.

இப்படிக்கு,
பேரன் மா. கணேசராஜா,
(மாவட்ட நீதிபதி சாவகச்சேரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள அப்பம்மா!

அன்புள்ள அப்பம்மா அருமையான - அப்பம்மா
விந்தையாகப் பேசி வியக்க வைக்கும் அப்பம்மா
விகடமான கதைகள் சொல்லிச் சிரிக்க வைக்கும் அப்பம்மா

நுணாவிலில் எங்கள் வீட்டில்
அடிக்கடி வந்து நின்று விதம் விதமாய் சமையல் செய்து
சுவைக்கத் தந்த சுப்பரான அப்பம்மா
தட்டை வடையும், பொடி சம்பலும்
பொட்டலமாய்க் கட்டித்தரும் அப்பம்மா

அவுஸ்திரோலியாவில் இருந்து இரு தடவை இலங்கை வந்து
உங்கள் முகம் கண்டு வந்தோம்.
ஈராண்டின் முன் உங்களைக் காணவென்று
நாங்கள் வந்த போது
கல கலப்பான கதைகள் சொல்லிக் கவர்ந்தீரே-எங்கள் உள்ளம்.
கனகாலம் இல்லை, ஒரு வருடம் தான் இருப்பேன்-என்று
உறுதியாகச் சொன்ன போது-இல்லை இன்னும் பல காலம்
உண்டு என்றோம் பகிடியாக.

திரும்பி வந்து பார்க்கவென்று திட்டங்கள் போட்டிருந்தோம்
உலகம் போதுமென்று பரலோகம் சென்று விட்டீர்களே!

கர்த்தரின் வீட்டில் களிப்புடன் இருப்பீர்-என்று எண்ணி
மனம் ஆறுகின்றோம்.

அன்புடன் பேரப்பிள்ளைகள்,
அவுஸ்திரேலியாவில் இருந்து,
பிரசாந், கிரிசாந், ஜனனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நினைவில் நிற்கின்ற காட்சிப் படங்கள் சில




செல்வத்தம்பியாரின் தாயார்



திரு செல்வத்தம்பி பேரன் அருணனுடன்



திரு செல்வத்தம்பியும் பிள்ளைகளும்



பிள்ளைகள் மாணிக்கவாசகர், சிறிக்கந்தராசா, நவரத்தினராசா, தருமராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி காந்திமதி செல்வத்தம்பி அவர்கள்
மூத்த மகன் மாணிக்கவாசகர், மருமகள் யோகேஸ்வரி, மருமகள் கல்பனா
துரைராசா ஆகியோருடன்



திருமதி காந்திமதி செல்வத்தம்பி அவர்கள்
பேர்த்தி குமுதினியின் திருமணத்தின் போது மருமகள் கல்பனா, மகன்
துரைராசா, மகன் தருமராசா ஆகியோருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி காந்திமதி செல்வத்தம்பி அவர்கள்
மகன் துரைராசா, மருமகள் கல்பனா ஆகியோருடன்



திருமதி காந்திமதி செல்வத்தம்பி அவர்கள்
மகன்மார்கள், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
ஆகியோருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாட்டி காந்திமதி செல்வத்தம்பி அவர்களின் பேரப்பிள்ளைகள்

1. கணேசராசா மாணிக்கவாசகர்
2. கற்பகராசா மாணிக்கவாசகர்
3. ஏரம்பராசா மாணிக்கவாசகர்
4. கணேசராணி மாணிக்கவாசகர்
5. அருணன் சிறீக்கந்தராசா
6. சாம்பவி சிறீக்கந்தராசா
7. நவநீதன் நவரத்தினராசா
8. மைதிலி நவரத்தினராசா
9. மதியழகன் தருமராசா
10. ஆதித்தன் தருமராசா
11. குமுதினி தருமராசா
12. சிறீனிவாசன் தருமராசா
13. அனுராஜ் ஆனந்தநடராசா
14. லதுராஜ் ஆனந்தநடராசா
15. அனுராதா ஆனந்தநடராசா
16. லதுமீரா ஆனந்தநடராசா
17. அபிராஜ் ஆனந்தநடராசா
18. பிரசாந் குலராசா
19. கிரிசாந் குலராசா
20. ஜனனி குலராசா
21. கிருத்திகா துரைராசா
22. சாரங்கன் கணேசராசா

## திருவாட்டி காந்திமதி செல்வத்தம்பி அவர்களின் பூட்டப்பிள்ளைகள்

1. செல்வன் கார்த்திகேயன் கணேசராசா
2. செல்வன் பிரணவன் கணேசராசா
3. செல்வன் மயூரேஷன் கணேசராசா
4. செல்வி கஜலக்சுமி கற்பகராசா
5. செல்வி சிவச்செல்வி கற்பகராசா
6. செல்வி சிவமீனா கற்பகராசா
7. செல்வி இந்துமதி அருளானந்தம்
8. செல்வி கனிமொழி அருளானந்தம்
9. செல்வன் சாரங்கன் ஏரம்பராசா
10. செல்வி மீனு ஏரம்பராசா
11. செல்வி கைலா சீடி
12. செல்வன் கீரன் சீடி
13. செல்வி நிலானி நவநீதன்
14. செல்வன் நரேன் நவநீதன்
15. செல்வன் அக்ஷயன் சதீஸ்குமார்
16. செல்வன் அகரன் சதீஸ்குமார்
17. செல்வி வர்சினி மதியழகன்
18. செல்வி கார்த்திகா மதியழகன்
19. செல்வன் அனுஷ் சாம்நாத்
20. செல்வி அனுசுருதி அனுராஜ்
21. செல்வன் சுகாஸ் அனுராஜ்
22. செல்வன் அஸ்வின் லதுராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சாவ

வினாசித்தம்பி – அன்

- இலட்சுமிப்பிள்ளை
- தங்கம்மா
- காந்திமதி + செல்வத்தம்பி
  - மாணிக்கவாசகர் + யோகேஸ்வரி
    - கணேசராஜா
    - கற்பகராஜா
    - ஏரம்பராஜா
    - கணேசராணி
  - சிறீக்கந்தராசா + மாதினி
    - அருணன்
    - சாம்பவி
  - பத்மாவதி + கதிர்காமத்தம்பி
  - நவரத்தினராசா + மனோகரா
    - நவநீதன்
    - மைதிலி
  - தருமராசா + பர்வதபத்தினி
    - மதியழகன்
    - ஆதித்தன்
    - குமுதினி
    - ஸ்ரீநிவாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவளி

ித்தம்பி – அன்னப்பிள்ளை

- தி
- முத்தம்மா
- பூரணம்
- வேலும்மயிலும்

ம்பி

- தருமராசா + பர்வதபத்தினி
  - மதியழகன்
  - ஆதித்தன்
  - குமுதினி
  - ஸ்ரீநிவாசன்
- ஆனந்தநடராசா + லீலாதேவி
  - அனுராஜ்
  - லதுராஜ்
  - அனுராதா
  - லதுமீரா
  - அபிராஜ்
- குலராசா + தேவரதி
  - பிரஷாந்
  - கிரிஷாந்
  - ஜனனி
- துரைராசா + கல்பனா
  - கிருத்திகா
- கணேசராசா + இந்துமதி
  - சாரங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Kumaran Press (Pvt) Ltd kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org